# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான கையேடு

# தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர் குழு

- தேர்தல் நடத்தும் அலுவலர் (முதன்னைச் செயலர் மற்றும் ஆணையர், பெரு நகர சென்னை மாநகராட்சி), தேர்தல் பணிக்கான நியமன ஆணையினைப் பிறப்பிப்பார்.
- தேர்தலுக்கான வாக்குப்பதிவு அலுவலர் குழு, தேர்தல் தலைமை அலுவலர் மற்றும் மூன்று வாக்குப்பதிவு அலுவலர்களைக் கொண்டதாக அமையும்.
- தாங்கள் அனைத்து ஒத்திகைகள் மற்றும் பயிற்சி வகுப்புகளில் தவறாமல் கலந்து கொள்ளல் வேண்டும்.
- வாக்குப்பதிவுக் குழுவில் உள்ள அலுவலர்கள் தங்களது முகவரி, செல்போன் எண் தெரிந்து வைத்துக் கொண்டு ஒரு இணக்கமான உறவை ஏற்படுத்திக், குழுவில் உள்ள அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

# பயிற்சி வகுப்புகள்

- சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் தேர்தல் சட்டத்தையும், விதிமுறைகளையும் மற்றும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அவ்வப்போது வழங்கும் அறிவுரைகளையும், நெறிமுறைகளையும் அறிந்திருக்க வேண்டும்.
- வாக்குப்பதிவு இயந்திரங்களைக் கொண்டு வாக்குப்பதிவு நடத்துதல் தொடர்பான விதிகள், நடைமுறைகள், வாக்குப்பதிவு இயந்திரத்தினை இயக்குதல் குறித்து அறிந்திருத்தல் வேண்டும்.

# பயிற்சி வகுப்புகள்...

- வாக்குச் சாவடித் தலைமை அலுவலர் மற்றும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள வாக்குப் பதிவு அலுவலர் ஆகியோர் வாக்குப்பதிவு ஒத்திகை எடுத்துக் கொள்ள வேண்டும்.
- அதாவது ஒவ்வொருவரும் தனித்தனியாக வாக்குப்பதிவு இயந்திரத்தினை இயக்கி ஒத்திகை பார்க்க வேண்டியது இன்றியமையாததாகும்.
- தாள்முத்திரை, ஒட்டுத்தாள் முத்திரை, சிறப்பு அட்டை மற்றும் முகவரிச்சீட்டு ஆகியவற்றை பொருத்தும் முறை குறித்தும் நன்கு அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.
- பதிவான வாக்குகளின் கணக்கு மற்றும் தாள் முத்திரைக் கணக்கு ஆகியவற்றிற்கான மாதிரிகளை (படிவம் 23) தயாரித்துப் பார்த்தல் வேண்டும்.

# வாக்குச்சாவடியை அடைதல்

- தங்கள் வாக்குச்சாவடி அமைந்துள்ள இடம், அதனைச் சென்றடைய மேற்கொள்ள வேண்டிய வழி மற்றும் பயண நேரம் ஆகிய விவரங்களை முன்கூட்டியே நன்கறிந்து கொள்ளுங்கள்.
- வாக்குப்பதிவு அலுவலர்கள் வாக்குப்பதிவு நாளுக்கு முந்தைய நாள் பகல் 12 மணிக்குள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச் சாவடியினை வந்தடைய வேண்டும்.

# மாற்றுப் பணியாளர்

- தேர்தல் நடத்தும் அலுவலர் வாக்குச் சாவடித் தலைமை அலுவலர் பணிக்கு வர இயலாமல் போகும் நேர்வில் குழுவில் ஒருவரை வாக்குச் சாவடித் தலைமை அலுவலர் பணியினை மேற்கொள்ள அங்கீகாரம் அளித்து ஆணை வெளியிடுவார்.
- வாக்குப்பதிவு அலுவலர்கள் வராமல் இருந்தால் இவ்விவரத்தை தேர்தல் நடத்தும் அலுவலருக்கு உடனடியாக மண்டல அலுவலர் மூலம் தெரிவித்து இருப்பில் உள்ள மாற்றுப் பணியாளரைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

# மாற்றுப் பணியாளரின் அதிகாரம் ...

- உடல் நலமின்மை மற்றும் எதிர்பாராத காரணங்களால் வாக்குச்சாவடிக்கு வர இயலாத சூழ்நிலையில் வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் பணிகளை ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட வாக்குப்பதிவு அலுவலர் ஏற்று நடத்துவார்.
- வாக்குச்சாவடி தலைமை அலுவலருக்கு உரிய அனைத்து அதிகாரங்களும் மற்றும் பொறுப்புகளும் இந்த வாக்குப்பதிவு அலுவலருக்கு பொருந்தும்.

# வாக்குப்பதிவு அலுவலர்கள் நலன்

- உங்களது வாக்குச்சாவடியில் பர்தா அணிந்த பெண் வாக்காளர்கள் அதிகம் இருப்பின் அவர்களது தனித்தன்மைக்கு இடையூறு நேராவண்ணம் அடையாளம் காணுதல், அழியா மையிடுதல் போன்றப் பணிகளை பெண் வாக்குப்பதிவு அலுவலர்களைக் கொண்டு செய்ய வேண்டும்.
- புதிய இடத்தில் பணிக்குச் செல்வதால், அலுவலர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் செயல்படுதல் நலம். குறிப்பாக பெண் அலுவலர்கள் (வாக்குப் பதிவைக் கண்காணிக்க கேமராக்கள் பொருத்தப்பட்டிருக்கலாம்)

# வாக்குச் சாவடியில் வசதிகள்

- பள்ளியின் தலைமை ஆசிரியர் /ஆசிரியர்களிடம் வசதிகள் பற்றி அறிந்து கொள்ளுதல், மின்சாரம், கழிவறை வசதிகள், குடிநீர் வசதிகள், பயன்படுத்தாமல் உள்ள கட்டிடங்கள், கேமரா, அருகில் உள்ள மருத்தவமனை மற்றும் மருத்துவர்கள், தீயணைப்பு நிலையம், ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்.
- மறுநாளில் நடைபெறவுள்ள வாக்குப்பதிவிற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும், முன்தினமே செய்து முடிப்பதுடன், வாக்குப்பதிவு நாளன்று நீங்கள் காலை 6.00 மணிக்கே வாக்குச்சாவடியில் பணியாற்ற உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

‘

# பணிப் பகிர்வு

- வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் பணிகளில் சிலவற்றை மற்ற வாக்குப்பதிவு அலுவலர்களுக்கும் பகிர்ந்தளிக்கலாம்.
  - வாக்குச்சாவடிக்குத் தேவையான பொருட்களைச் சேகரித்தல்,
  - தேர்தல் சாதனங்களைச் சரிபார்த்துப் பெற்றுக் கொள்ளுதல்,
  - வாக்குப்பதிவு கருவிகளை வாக்குப்பதிவுக்குத் தயார்படுத்திக் கொள்ளல்
  - வாக்குச்சாவடி அமைந்துள்ள இடத்தில் ஒட்டப்பட வேண்டிய விளம்பரத்தாள்கள் / சுவரொட்டிகள் (Posters)

# வாக்குப்பதிவு பொருட்கள்

- வாக்குப்பதிவுப் பொருட்கள் அனைத்தும் மண்டல அலுவலரால் (Zonal Officer) தேர்தல் நாளுக்கு முதல் நாள் வழங்கப்படும்.
- **முக்கியமான தேர்தல் பொருட்கள்**
  - வாக்குப்பதிவு இயந்திரம்,
  - நீல நிறத் தாள் முத்திரைகள்,
  - ஒட்டுத்தாள் முத்திரை,
  - சிறப்பு அட்டை,
  - குறியீடு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் மற்றும் பட்டியலின் கூடுதல் பிரதிகள்,

# வாக்குப்பதிவு பொருட்கள் ...

- ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகள் பதிவேடு,
- அழியா மை குப்பிகள்
- வாக்காளர் பதிவேடு (படிவம் 21),
- வாக்காளர் துண்டுச்சீட்டுகள்
- சட்டமுறைப் படிவங்கள்,
- அரக்கு முத்திரை மற்றும்
- மை ஒற்றும் படடைகள்

# வாக்குப்பதிவு இயந்திரங்கள்


**வாக்குப்பதிவு இயந்திரங்கள்**

- கட்டுப்பாட்டு கருவி (Control Unit) மற்றும் வாக்குப்பதிவு கருவி (Ballot Unit) என்ற இரு பாகங்களை கொண்டதாகும்.
- வாக்குப்பதிவு கருவியுடன் (Ballot Unit) மின்கம்பி (cable) நிரந்தரமாக பொருத்தப்பட்டிருக்கும்.
- வாக்குப்பதிவு இயந்திரம் இயக்கப்படும் போது வாக்குப்பதிவு கருவியுடன் கட்டுப்பாட்டு கருவியும் மின்கம்பி மூலம் இணைக்கப்பட்டிருக்கும்.

# வாக்குப்பதிவுக் கருவிகள்

- வேட்பாளர் எண்ணிக்கைக்கு ஏற்ப, வாக்குப்பதிவுக் கருவிகள் (balloting unit) வழங்கப்படும்.
- அவற்றின் ஒவ்வொன்றிலும் வாக்குச்சீட்டுத் திரையின் (ballot paper screen) வாக்குச்சீட்டுகள் முறையாக பொருத்தப்பட்டிருக்கும்.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எண்ணிக்கை 2 முதல் **16க்குள்ளாக** இருப்பின், ஒரே ஒரு வாக்குப்பதிவுக் கருவி மட்டுமே வழங்கப்படும். அதன் வலது பக்க மேற்புறத்தில் சன்னல் மூலம் காணப்படும் **ஸ்லைட் சுவிட்ச்** (slide switch) தேர்தல் நடத்தும் அலுவலரால் **1 என்ற நிலையில்** வைக்கப்பட்டிருக்கும்.
- வேட்பாளர் எண்ணிக்கை **17 முதல் 32க்குள் இருப்பின்**, **இரண்டு வாக்குப்பதிவு கருவிகள்** வழங்கப்படும்.

# தள்ளு சுவிட்ச் மற்றும் வாக்குப்பதிவு கருவிகள்



# வாக்குப்பதிவுக் கருவிகள்

- **வரிசை எண்கள், போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சின்னங்கள்** ஆகிய விவரங்கள் அடங்கிய வாக்குச்சீட்டு வாக்குப்பதிவு கருவியில் (ballot unit) ல் சரியான வரிசையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

- வாக்குச்சீட்டிலுள்ள பெயர்களைப் பிரிக்கும் கோடும், வாக்குப்பதிவுக் கருவிகளில் பட்டன்களைப் பிரிக்கும் கோடும் (grooves) **ஒரே சீராக நேர்கோட்டில்** அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- Candidates Buttonஎண்ணிக்கையும் போட்டியிடும் வேட்பாளர்கள் எண்ணிக்கையும் சரியாக இருக்க வேண்டும். **மீதமுள்ள பட்டன்கள் மறைக்கப்பட்டிருக்க வேண்டும்.**
- ஒவ்வொரு வாக்குப்பதிவுக் கருவியும் இரண்டு இடங்களில் தேர்தல் நடத்தும் அலுவலரால் மூடி முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும். **(வலது பக்க மேற்பகுதி மற்றும் வலது பக்க கீழ்ப்பகுதி).**
- **முகவரி அட்டைகள்** உறுதியாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

# முகவரி அட்டைகள்

- முகவரி அட்டைகள் வெள்ளை நிறத்தில் பின்வரும் விவரங்களைக் கொண்டிருக்கும்.

**<u>வாக்குப்பதிவு கருவி 1–க்கான முகவரி அட்டை</u>**

[BALLOT UNIT-1 ADDRESS TAG]

**...............................................** மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சியின் வார்டு எண் **................** க்கான உறுப்பினர் தேர்தல்

வாக்குப்பதிவுக் கருவி வரிசை எண் ____________________.

வாக்குப்பதிவு நாள் ____________________.

# கட்டுப்பாட்டுக் கருவி

**கட்டுப்பாட்டு கருவி**

- வேட்பாளர் அமைப்புப் பிரிவு (candidate set section) மற்றும் தேர்தல் முடிவை தெரிவிக்கும் பிரிவு (result section) ஆகிய இரு பிரிவுகள் உள்ளன.

வாக்கு முடிவு பிரிவில் (result section) அடங்கியுள்ளவை.

1. **குளோஸ் (Close) பட்டன் –** வாக்குப்பதிவினை முடிவுக்கு கொண்டு வருவதற்கு
2. **வாக்குப்பதிவு முடிவு பட்டன் (Result) –** தேர்தல் முடிவை அறிவதற்கு
3. **கிளியர் (Clear) பட்டன் –** வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள

# கட்டுப்பாட்டு கருவி ...

கட்டுப்பாட்டு கருவியின் **(control unit)** அடிப்புறத்தில் **(Below Result Section)** கீழ்க்கண்ட இரு பட்டன்கள் அமைந்துள்ளன.

(அ) **வாக்குப்பதிவு (Ballot) பட்டன்** – இதனை அழுத்துவதன் மூலம் வாக்குகளை பதிவு செய்வதற்கு வாக்குப் பதிவு கருவி (balloting unit) தயார் ஆகிறது.

(ஆ) **மொத்தம் (Total) பட்டன் –** இதனை அழுத்துவதன் மூலம் அப்போதைய நிலை வரை பதிவான மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை மட்டும் (வேட்பாளர் வாரியான புள்ளி விவரங்கள் அன்றி) அறியலாம்.

# முகவரி அட்டை

இந்த முகவரி அட்டை பின்வரும் விவரங்களை கொண்டிருக்கும்

<u>கட்டுப்பாட்டுக் கருவிக்கான முகவரி அட்டை</u>

**[CONTROL UNIT ADDRESS TAG]**

**.............................................. மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி வார்டு எண்**

**...........................க்கான உறுப்பினர் தேர்தல்**

**கட்டுப்பாட்டுக் கருவி எண் ____________________.**
**(அடையாள எண்)**

**வாக்குச்சாவடியின் தொடர் எண் மற்றும் பெயர் ____________________.**

**வாக்குப்பதிவு நாள் ____________________.**

# வாக்குப்பதிவு இயந்திரத்தை சரிபார்த்தல்

- வாக்குப்பதிவு இயந்திரத்தின் **கட்டுப்பாட்டுக் கருவி** மற்றும் **வாக்குப்பதிவு கருவி (கள்)** அந்த வாக்குச்சாவடிக்கு உரியது என்பதை முகவரி அட்டைகளில் குறிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி எண் மற்றும் பெயருடன் ஒப்பிட்டு சரிபார்த்தல்.
- கட்டுப்பாட்டு கருவியின் **வேட்பாளர் அமைப்புப் பிரிவு உரியவாறு முத்திரையிடப்பட்டுள்ளது** என்பதையும் **முகவரி அட்டை** நன்கு பிணைக்கப்பட்டுள்ளது என்பதையும் உறுதி செய்தல்.
- கட்டுப்பாட்டுக் கருவியிலுள்ள **வேட்பாளர் அமைப்புப் பிரிவில்** உள்ள மின்கலம் (battery) செயல்பாட்டில் உள்ளதை கட்டுப்பாட்டுக் கருவியின் பின்புறமுள்ள power switch யை இயக்க (on) நிலையில் இயக்குவதன் மூலம் சரிபார்த்து பின்னர் மின் சக்தி இயக்கக் கருவியை (switch) இயங்கா நிலைக்குக் (off) கொண்டு வரவும்.

# வாக்காளர் பட்டியலை சரிபார்த்தல்

- வாக்காளர் பட்டியலின் நகல்கள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.
- ✓ வாக்காளர் பட்டியல் அந்த வாக்குச்சாவடிக்குள் அடங்கிய வாக்களிக்கும் பகுதிக்கு உரியதாக இருக்க வேண்டும்.
- ✓ இணைப்புப் பட்டியல்களுடன் (supplements) இருக்க வேண்டும்.
- ✓ வாக்காளர் பட்டியல் (ஒவ்வொரு நகலிலும்) 1ஆம் எண் முதற்கொண்டு தொடர்ச்சியாக (serially numbered) எண்ணிடப் பெற்று இருக்க வேண்டும்.

# வாக்காளர் பட்டியலை சரிபார்த்தல் ...

- இணைப்புப் பட்டியலின்படி (திருத்தப்பட்டியல்) பெயர் நீக்கங்கள் பிழைத் திருத்தங்கள் ஏனைய திருத்தங்கள் ஆகியன ஒவ்வொரு நகல்களிலும் மேற்கொள்ளப்பட்டு இருக்க வேண்டும்.

- அச்சிடப்பட்ட வாக்காளர்களின் தொடர் எண் திருத்தப்படாமலும் புதிய தொடர் எண்ணை அவற்றிக்கு மாற்றாக கொடுக்கப்படாமல் இருப்பதையும் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

# ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுக்கள்

- வழங்கப்பட்டுள்ள ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுக்கள் (tendered ballot papers) உங்கள் வாக்குச்சாவடிகளில் அடங்கிய வாக்களிக்கும் பகுதிக்குரிய வாக்குச்சீட்டுதானா என்பதையும் அவைகள் எவ்வகையிலும் பழுது இல்லாமல் உள்ளனவா என்பதையும் அதன் தொடர் எண்கள் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விபரங்களுடன் ஒத்து இருக்கின்றனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.
- போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் தேர்தல் முகவர்கள் ஆகியோரின் மாதிரிக் கையொப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

# அழியா மை குப்பி


- **இரண்டு அழியா மை குப்பிகள்**

  குப்பிகளில் அழியா மை, மை ஒற்றும் பட்டைகளில் (stamp pad) போதுமான அளவுக்கு **மை** உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

- **வாக்காளர் துண்டுச்சீட்டுகள்** உரிய அளவுகளில் அச்சடிக்கப்பட்டு, வாக்குச்சாவடிக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 100 அல்லது 50 சீட்டுகள் கொண்ட கட்டுகளாக வழங்கப்படும்.

# வாக்குச்சாவடி அமைப்பு

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்
மாதிரி வாக்குச்சாவடி அமைப்பு (மின்னணு வாக்குப்பதிவு)



# வாக்குச்சாவடி அமைப்பு ...

- **வாக்குச்சாவடி அமைப்பு** வாக்குச்சாவடித் தலைமை அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோர் அமர வேண்டிய இடங்களையும், வாக்குப் பதிவிற்கான மறைவிடங்களையும் தீர்மானித்துக்கொள்ளுங்கள்.
- தவிர்க்க இயலாத நிகழ்வுகளில் தேவையிருப்பின் **சிறு மாற்றங்களை செய்துகொள்ளலாம்.**
- **மாற்றங்களைப் பதிவு செய்த வைத்துக் கொள்ளுதல் சிறந்தது.**

# வாக்குப்பதிவு அடைப்புப் பகுதி

- இரகசியமாக வாக்களிக்க வாக்குப்பதிவுக் கருவியை வாக்குப்பதிவு அடைப்புப் பகுதியில் வைக்க வேண்டும். வாக்களிக்க எவ்வித இடையூறும் இல்லாத வகையில் மேசைகளின் மீது வைக்கப்பட வேண்டும்.
- வாக்குப்பதிவுக் கருவிகளுடன் நிலையாக இணைக்கப்பட்டுள்ள மின்கம்பியானது (cable) வாக்குப்பதிவு அடைப்புப்பகுதியின் (voting compartment) **அடிப்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள துளை** ஒன்றிலிருந்து வெளிவர வேண்டும்.
- வாக்குப்பதிவு மறைவிடத்தில் போதிய வெளிச்சம் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். அவசியமாயின் தகுந்த வெளிச்சம் இருப்பதற்கான ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

# வாக்குப்பதிவு இயந்திரங்களைத் தயார் நிலையில் வைத்தல்

- வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்னர், வாக்குப் பதிவுக் கருவியை ஒதுக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு அடைப்புப் பகுதிக்கு உள்ளே வைக்க வேண்டும்.
- கட்டுப்பாட்டுக் கருவி வைக்கப்பட்டு, இயக்கப்படுகின்ற மேசையிலிருந்து போதுமான தொலைவில் வாக்குப்பதிவு அடைப்புப் பகுதி அமைக்கப்பட வேண்டும்.
- வாக்குப்பதிவுக் கருவியையும் கட்டுப்பாட்டுக் கருவியையும் இணைக்கும் மின் கம்பியின் (Inter-connecting cable) நீளம் ஏறக்குறைய 5 மீட்டர்களாகும். எனவே, வாக்குப்பதிவு அடைப்புப் பகுதி நியாயமான தொலைவில் இருக்க வேண்டும்.

# வாக்குப்பதிவு இயந்திரங்களைத் தயார் நிலையில் வைத்தல்

- இந்த மின்கம்பியின் இணைப்பு வாக்குச்சாவடிக்குள், வாக்காளர்களின் நடமாற்றத்திற்குத் தடையாக இருக்கக்கூடாது மற்றும் அது காலால் மிதிபடவோ காலிடறும் வகையிலோ இருத்தல் கூடாது.
- வாக்குப்பதிவு அடைப்புப் பகுதியில், வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்படும்போது, வாக்களிப்பின் இரகசியம் மீறப்படாத வகையில் இருக்குமாறு தவறாமல் உறுதி செய்ய வேண்டும்.
- மேற்படி மின்கம்பியினை (Inter-connecting cable) கட்டுப்பாட்டுக்கருவி மற்றும் வாக்குப்பதிவுக் கருவி அமைந்துள்ள பகுதியில் ஏதாவதொரு மேசையின் கால் பகுதியில் கட்டி வைக்கலாம்.

# வாக்குச்சாவடி முகவர்களுக்கான இடம்

- வாக்குச்சாவடி முகவர்களுக்கு இடம்,
  - வாக்காளர்களை அடையாளம் கண்டு ஆட்சேபம் ஏதுமிருப்பின் தெரிவிக்கும் வகையிலும்,
  - வாக்குச்சாவடி அலுவலர் கட்டுப்பாட்டுக் கருவிகளை (control unit) இயக்குவதை பார்க்கும் வகையிலும்,
  - வாக்களித்துவிட்டு வெளியே செல்லும் வரை வாக்காளரின் நடவடிக்கையினை கவனிக்கும் வகையிலும் அமைந்திருக்க வேண்டும்.
- ஒரு வாக்காளர் எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கின்றார் என்பதை பார்க்க இயலாத வகையில் அவர்களுக்கு இருக்கை அமைப்பு இருக்க வேண்டும்.
- வாக்குச்சாவடி முகவர் எவரும் வாக்குச்சாவடிக்குள் நடமாடாமல் இருக்குமாறும், அவர்கள் அவரவர்களுடைய இருக்கையில் இருக்குமாறும் கவனித்துக் கொள்ளுதல்.

# வாக்காளர்களுக்கான வசதிகள்

**வாக்குச் சாவடியில் வசதிகள்:**

1. வாக்காளர்கள் காத்திருக்க மற்றும் வரிசை அமைக்க இடவசதி
2. ஆண் பெண் வாக்காளர்கள் தனித்தனியே வரிசையில் நிற்க போதிய இடவசதி
3. வாக்காளர்கள் உள்ளே செல்வதற்கும் வெளியே வருவதற்கும் தனித்தனி வழிகள்
4. தனித்தனி வழிகள் இல்லாத நிலையில் மூங்கில் அல்லது கயிறு ஆகியவற்றைக்கொண்டு தனித்தனி வழிக்கான தடுப்பு அமைத்துக்கொள்ள வேண்டும்.
5. வாக்களிக்கச் செல்லும் வாக்காளர்கள் மற்றும் வாக்களித்துவிட்டு வரும் வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்குள் இடையூறின்றி சென்றுவரும் வகையில் அமைத்திருத்தல்
6. சாமியானா பந்தல், குடிநீர், மருத்துவ வசதி, வாக்காளர்கள் அதிகமாக வரும் நிலையில் உட்காருவதற்கான வசதி ஆகியவற்றை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

# வாக்குச்சாவடிக்கு வெளியில்

**வாக்குச்சாவடிக்கு வெளியில் விளம்பர ஏடுகளை ஒட்டிவைத்தல்**

- வாக்குச்சாவடியில் எந்த பிரிவில் உள்ள வாக்காளர்கள் வாக்களிக்கலாம் என்ற அறிவிப்பு.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களும் சின்னங்களும் அடங்கிய பட்டியல்.

**வாக்குச் சாவடி**

- ஒரே கட்டடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தால் ஒவ்வொரு வாக்குச் சாவடிக்குமான வாக்காளர்களை தனித்தனியாக பிரித்துக்காட்டும் வகையில் உரிய இடைவெளியிட்டு தடுப்புகள் ஏற்படுத்தி வாக்காளர்கள் குழப்பமின்றி வாக்களிக்க வசதி செய்துதர வேண்டும்.

# கட்டுப்பாட்டுப் பகுதி

- தனியார் கட்டத்தில் வாக்குச்சாவடி அமைந்திருந்தால் அந்தக் கட்டடம் மற்றும் அதனைச் சுற்றி 100 மீட்டர் தூரத்தில் உள்ள பிரிவுகள் உங்களது கட்டுப்பாட்டின்கீழ் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். கட்டடத்தின் உரிமையாளர் அல்லது அவரைச் சார்ந்தவர்கள் எவரும் வாக்குப்பதிவின் போது வாக்குச்சாவடிப் பிரிவுக்குள் பிரவேசித்தல் கூடாது.

- அரசியல் கட்சி தலைவர்களின் புகைப்படங்கள் தேர்தல் சம்பந்தமான பிரச்சார வாசகங்கள் மற்றும் சின்னங்கள் ஆகியவை உங்களது வாக்குச்சாவடியிலோ அல்லது உங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளிலோ இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால் வாக்குப்பதிவு முடியும்வரை அவற்றை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# 100 மீட்டர், 200 மீட்டர் தூரம்

**வாக்குச்சாவடிக்கு அருகில் பிரச்சாரம் செய்வதைத் தவிர்த்தல்**

- வாக்குச்சாவடியிலிருந்து 100 மீட்டர் தூரத்தில் சுண்ணாம்பினால் எல்லைக்கோடு போடப்பட்டிருக்கும். இந்த எல்லைக்கோட்டுக்குள் எந்த ஒரு நபரும் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரின் பெயர் அல்லது அரசியல் கட்சியின் தலைவர்களது பெயர் சின்னம் கொண்டுள்ள வில்லையை (Badge) அணிந்து கொண்டிருக்கக் கூடாது.

**வேட்பாளர்களின் தேர்தல் சாவடிகள்** (Candidates' booths)

- வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவுக்கு அப்பால் வேட்பாளர்களுடைய முகவர்களும் ஊழியர்களும் வாக்காளர்களுக்கு அலுவல் சார்பற்ற அடையாளச் சீட்டுகளை வழங்குவதற்காக அவர்களின் பயன்பாட்டிற்காக மேசை ஒன்றையும் இரண்டு நாற்காலிகளையும் வேட்பாளர்கள் ஏற்பாடு செய்யலாம். மழை, வெய்யிலிலிருந்து பாதுகாக்கக் குடை, தார்ப்பாய் பயன்படுத்தலாம்.

# முறைகேடு நடைபெறுவதை தடுத்தல்

**வாக்குச்சாவடியில் அல்லது அதன் அருகில் முறைகேடு நடைபெறுதல்**

- சமரச முயற்சிகளும் எச்சரிக்கைகளும் பயன்படாமல் போகின்ற நிலையில் மட்டுமே அதிகாரங்களைப் பயன்படுத்த முற்படல் வேண்டும்.
- குரல் பெருக்கி (Megaphone) அல்லது ஒலிபெருக்கி (Loudspeaker) வாக்குச்சாவடியின் பணிக்கு இடையூறாக அமையுமானால் அவற்றைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்கென தொலைவு வரம்பு இல்லை.

**வாக்குப்பதிவு இயந்திரங்கள்**

- கட்டுப்பாட்டு கருவி (Control Unit) மற்றும் வாக்குப்பதிவு கருவி (Ballot Unit) என்ற இரு பாகங்களை கொண்டதாகும்.
- வாக்குப்பதிவு கருவியுடன் (Ballot Unit) மின்கம்பி (cable) நிரந்தரமாக பொருத்தப்பட்டிருக்கும்.

# வாக்குப்பதிவு பணி – சரிபார்ப்புப் பட்டியல்

| ஆற்ற வேண்டிய பணி | முடிக்கப்பட்டதா ? |
|---|---|
| 1. வாக்குச்சாவடியை நண்பகலுக்கு முன் சென்றடைதல் | |
| 2. வாக்குச்சாவடிக் கட்டடத்தைப் பார்வையிடல் | |
| 3. வாக்குப்பதிவு அலுவலர்கள் வருகை சரிபார்த்தல் | |
| 4. வாக்குப்பதிவு பொருட்களை சரிபார்த்தல் | |
| 5. வாக்குச்சாவடியை வாக்குப் பதிவிற்கு ஏற்றவகையில் அமைத்தல் | |
| 6. வாக்காளர் பட்டியலைச் சரிபார்த்தல் | |
| 7. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை இயக்கி சரிபார்த்தல் மற்றும் ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகளை சரிபார்த்தல். | |
| 8. வாக்குப்பதிவுப் பகுதி மற்றும் போட்டியிடும் வேட்பாளர்களைக் காட்டும் இரு வேறு சுவரொட்டிகளை (ஞடிளவநசள) (போஸ்டர்களை) வாக்குச்சாவடிக்கு வெளியே ஒட்டுதல் | |

# சரிபார்த்தல் குறிப்பு (Check Memo)

- **சரிபார்த்தல் குறிப்பு (Check Memo)**
- நீங்கள் தேர்தல் தொடர்பான பல்வேறு சட்டப்பூர்வத் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டீர்களா ? என்பதையும் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு, உங்களுக்காக தேர்தல் ஆணையம் ஒரு சரிபார்த்தல் குறிப்பு (Check Memo) ஏற்படுத்தியுள்ளது (இணைப்பு–2). மேற்படி சரிபார்த்தல் குறிப்பினை நீங்கள் முறையாகப் பராமரித்திடல் வேண்டும்.

# வாக்குச்சாவடி முகவர்கள் நியமனம்

## வாக்குச்சாவடி முகவர்கள் நியமனக் கடிதங்கள்

- வாக்குச்சாவடி முகவர்கள் ஒவ்வொருவரும் தேர்தல் விதிகள் படிவம் **11–**ல் அவர்களது நியமனக் கடிதத்தினை கொண்டுவர வேண்டும்.
- அந்த நியமனக் கடிதம் நீங்கள் தலைமை வகிக்கும் வாக்குச்சாவடிக்குரியதுதானா என்பதை சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.
- வாக்குச்சாவடி முகவர் நியமனக் கடிதத்தில் உள்ள உறுதிமொழியில், உங்கள் முன்னிலையில் அவர் கையொப்பமிட்ட பின்னர் அக்கடிதத்தினைப் பெற்றுக்கொண்டு வாக்குச்சாவடியினுள் அனுமதிக்க வேண்டும்.
- **இவ்வாறு பெறப்படும் நியமனக் கடிதங்களை பாதுகாப்பாக வைத்திருந்து வாக்குப்பதிவு முடிந்தவுடன் அவற்றை அதற்கான உறையிலிட்டு ஏனைய ஆவணங்களுடன் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு மண்டல அலுவலர் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.**

# முகவர்களின் வருகை

- வாக்குச்சாவடி முகவர்கள் அளிக்கும் நியமனக் கடிதங்களின் மீது ஐயம் எழுமாயின் அதிலுள்ள வேட்பாளர்/தேர்தல் முகவர்களின் கையொப்பத்தினை ஏற்கனவே உங்களுக்கு தேர்தல் நடத்தும் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள வேட்பாளர் / தேர்தல் முகவர்களின் மாதிரி கையொப்பங்களுடன் ஒப்பிட்டு சரிபார்த்துக் கொள்ளலாம்.

**வாக்குச்சாவடி முகவர்களின் வருகை**

- **வாக்குப்பதிவு துவங்குவதற்கு முன்னதாக**, வாக்குச்சாவடி முகவர்கள் வாக்குச்சாவடிக்கு வந்திருக்க வேண்டும்.
- வாக்குப்பதிவிற்கான ஆயத்தப்பணிகளை வருகை தந்துள்ள வாக்குச்சாவடி முகவர்களைக் கொண்டு துவங்க வேண்டும்.
- **தாமதமாக வரும் வாக்குச்சாவடி முகவர்களையும்** வாக்குச்சாவடியினுள் அனுமதிக்க வேண்டும்.
- ஆனால் இவர்களுக்கு **முடிக்கப்பட்ட ஆயத்தப்பணிகளை மீண்டும் செய்துகாட்ட வேண்டியதில்லை**.

# முகவர்களுக்கு நுழைவு அனுமதிச்சீட்டு

- வாக்குச் சாவடி முகவர்கள் மட்டும் தங்களது வேட்பாளரின் பெயர் அடங்கிய வில்லையை (Badge) அணிந்திருக்கலாம்.

**வாக்குச் சாவடி முகவர்களுக்கு நுழைவு அனுமதிச்சீட்டு வழங்குதல்**

- ஒவ்வொரு வேட்பாளரும், ஒரு வாக்குச் சாவடிக்கு ஒரு வாக்குச் சாவடி முகவரையும் அவருக்கு மாற்று நபர் ஒருவர் அல்லது இருவரையும் நியமிக்கலாம்.
- ஆனால், வாக்குச்சாவடியில் ஒரே சமயத்தில் ஒரு வேட்பாளருக்கு ஒரு முகவர் மட்டுமே இருக்க அனுமதிக்கப்படுவர்.
- வாக்குச் சாவடிக்குள் அனுமதிக்கப்படும் ஒவ்வொரு முகவருக்கும் கீழ்க்கண்ட படிவத்தில் நுழைவு அனுமதிச் சீட்டு ஒன்று வழங்க வேண்டும். அதன் அடிப்படையில் அவர் வாக்குச்சாவடிக்குள் வந்து செல்ல முடியும்.

# வாக்குச்சாவடி முகவருக்கான நுழைவு அனுமதிச் சீட்டு

வாக்குச்சாவடி எண்:

........................................................ (வேட்பாளரின் பெயர்) என்பவரின் வாக்குச் சாவடி முகவராகிய ................................................................ என்பவரைஅனுமதிக்கவும்.

முகவர் கையொப்பம் ...........................................

வாக்குச் சாவடி தலைமை அலுவலர்

(இந்த படிவத்தின் நகல்களும் ஏனைய தேர்தல் சாதனங்களுடன் உங்களுக்கு வழங்கப்படும், இதனையும் பெற்று ஏனைய ஆவணங்களுடன் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு மண்டல அலுவலர் மூலம் அனுப்பி வைக்க வேண்டுமா).

# வாக்குச்சாவடி முகவர் கொண்டு வரவேண்டியவை

அ. அவ்வாக்குச்சாவடி **சம்பந்தப்பட்ட வாக்காளர் பட்டியல்**.

ஆ. அவ்வாக்கெடுப்பு பகுதியில் **இறந்துவிட்ட, அப்பகுதியை விட்டு வெளியேறிய வாக்காளர்கள் விவரம்**.

இ. அவரது **உலோக முத்திரை (மோதிரம் தவிர) பேனா, பென்சில், தாள்** போன்றவை.

# வாக்குப்பதிவிற்கான முன்னேற்பாடுகள்

- வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு இயந்திரத்தினை பயன்படுத்துவதற்குமுன் தேர்தல் நடத்தும் அலுவலர் நிலையில் முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- இத்தகைய ஏற்பாடுகள் வாக்குச்சாவடி தலைமை அலுவலரால் வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் வாக்குப்பதிவு துவங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக செய்யப்படுதல் வேண்டும்.
- முகவர்கள் எவரேனும் வருகை தரவில்லை எனில் இத்தகைய முன்னேற்பாடுகளை ஒத்தி வைக்கவோ அல்லது அவர்கள் வரும் வரை காத்திருந்து அதன் பின் துவங்குவது கூடாது.
- முகவர் எவரேனும் தாமதமாக வந்தால் அவருக்காக ஆயத்தப் பணிகளை மீண்டும் புதிதாகத் தொடங்கி செய்ய வேண்டியதில்லை.

# முதலாவது வாக்குப்பதிவு அலுவலர்

உறுப்பினர்/கவுன்சிலர் தேர்தல்

1. குறியீட்டு வாக்காளர் பட்டியல் (Marked copy of electoral roll)
2. வாக்காளர் பதிவேட்டு பராமரிப்பு
3. துண்டுச்சீட்டினை வழங்குதல்.
4. வாக்காளரின் அடையாளம் கண்டறிதல்

வாக்குச்சாவடிக்குள் நுழைந்ததும் வாக்காளர் நேராக வாக்குப்பதிவு முதலாவது அலுவலரிடம் செல்வார். வாக்குச்சாவடியின் முதலாவது அலுவலர் வாக்காளர்களை அடையாளம் காண்பதற்கும் உறுப்பினர்/கவுன்சிலர் தேர்தலுக்கான குறியீட்டு வாக்காளர் பட்டியலை பராமரிப்பதற்கும் பொறுப்பாவார்.

# முதலாவது வாக்குப்பதிவு அலுவலர்

- வாக்காளர் ஒவ்வொருவரும் ஏதேனுமொரு **அடையாளச் சீட்டுடன்** வரலாம்.

**இருக்க வேண்டியவை**

- அந்தச் சீட்டு **சாதாரண வெள்ளைத்தாளில்** இருக்க வேண்டும். அதில்
- **வாக்காளரின் பெயர்**
- **வாக்காளர் பட்டியலில் அவருடைய தொடர் எண்**
- **வாக்காளர் பட்டியல் பகுதி எண்**
- **அவர் வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடியின் எண் மற்றும் பெயர்** ஆகிய விவரங்கள் அடங்கியிருக்கலாம்.

**இருக்கக்கூடாதவை**

- வேட்பாளரின் பெயர்
- கட்சியின் பெயர்
- அவருக்கு ஒதுக்கப்பட்ட சின்னத்தின் மாதிரிப்படம்

# முதலாவது வாக்குப்பதிவு அலுவலர்

- **அடையாளச் சீட்டு** இல்லை
- அடையாள சீட்டை கொண்டு வருமாறு கட்டாயப்படுத்தக்கூடாது
- அவரைத் திருப்பி அனுப்பி விடக்கூடாது
- வாக்குச்சாவடி அலுவலர் அவரது பெயர், வீட்டு எண் கொண்டு அவரது பெயரை வாக்காளர் பட்டியலில் கண்டுபிடிக்க வேண்டும்.
-

**வாக்காளரின் அடையாளத்தை** சரிபார்த்தல்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக் கொண்டு வாக்காளரை அடையாளம் கண்டு **அனுமதிக்கலாம்.**

ஆணையம் நிர்ணயித்துள்ள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை தாக்கல் செய்ய இயலாத வாக்காளரை வாக்களிக்க **அனுமதிக்கக் கூடாது.**

# முதலாவது வாக்குப்பதிவு அலுவலர்

**வாக்காளரின் அடையாளத்திற்கு எதிர்ப்பு**

வேட்பாளர் / அவருடைய தேர்தல்/வாக்குச்சாவடி முகவர் தெரிவித்தால் வாக்காளரை உரிய விசாரணைக்கும், நடவடிக்கைக்கும் வாக்குச்சாவடியின் தலைமை அலுவலரிடம் அனுப்ப வேண்டும்.

**வாக்காளரின் விவரங்கள் சரிபார்த்தல்**

வாக்குச்சாவடி முகவர்களுக்கு கேட்கும்படி, பக்க எண், தொடர் எண், வாக்காளரின் பெயர் ஆகியவற்றை உரத்த குரலில் சொல்ல வேண்டும். (எழுத்துப் பிழைகளையும், அச்சுப் பிழைகளையும் பொருட்படுத்தக்கூடாது).

குறியீட்டு வாக்காளர் பட்டியலில் சரி (✓) குறியிட வேண்டும்.

அனைத்து வாக்குச்சாவடியாக இருந்தால், பெண் வாக்காளருக்கு சரி (✓) குறியீட்டுடன் அவரது பெயரை அடிக்கோடிட்டு காட்ட வேண்டும்.

**மூன்றாம் பாலினத்தவர்களுக்கு**

# முதலாவது வாக்குப்பதிவு அலுவலர்

**மை வைத்தல் மற்றும் பதிவு செய்தல்**

வாக்காளரை **இரண்டாம் வாக்குப்பதிவு** அலுவலரிடம் அனுப்ப வேண்டும். இரண்டாம் வாக்குப்பதிவு அலுவலர் வாக்காளருக்கு அடையாள மையிடுவார்.

அடையாள மையிட்டவுடன் வாக்காளர் மீண்டும் **முதலாம் வாக்குப்பதிவு** அலுவலரிடம் வருவார். **(பணிச்சுமையை இலக்குவதாக்குவதற்கும், கோவிட் தொற்று காலத்திலும்)**

முதலாம் வாக்குப்பதிவு அலுவலர் வாக்காளர் பதிவேட்டில் (படிவம் 21) பதிவு செய்து

- வாக்காளரின் கையொப்பம் அல்லது இடது கை பெருவிரல் ரேகை பெற வேண்டும்.
- வாக்காளர் ஒருவரின் இடது கை பெருவிரல் இல்லாவிடத்து அவரின் வலது கை பெருவிரலின் பதிவை பெறுதல் வேண்டும்.
- இரண்டு பெருவிரல்களுமே இல்லையெனில், இடது கை விரல்களில் **(ஆள்காட்டி)** சுட்டு விரல் தொடங்கி யாதேனுமொரு விரலில் பதிவை பெறுதல் வேண்டும்.

# முதலாவது வாக்குப்பதிவு அலுவலர்

இடது கையில் விரல்கள் இல்லையெனில் வலது கையின் விரல்களில் சுட்டு விரல் தொடங்கி யாதேனுமொரு விரலின் பதிவை பெறுதல் வேண்டும்.

விரல்கள் எவையும் இல்லாதவிடத்தும் வாக்காளர் தம்முடைய வாக்குச்சீட்டில் குறியீடு செய்திட இயலாத நிலையில் அனுமதிக்கப்பட்டத் துணையாளரின் கையொப்பம் அல்லது பெருவிரல் பதிவினை பெற வேண்டும்.

# முதலாவது வாக்குப்பதிவு அலுவலர்

- தேர்தலில் வாக்களிப்பதற்கான **துண்டுச்சீட்டை (voters slip)** வழங்க வேண்டும்.

**உறுப்பினர் தேர்தல்**

**வாக்காளர் துண்டுச்சீட்டு**

1. வாக்காளர் பதிவேட்டின் கலம் (1)–ல் குறிப்பிட்டுள்ளபடி வாக்காளரின் தொடர் எண். ..............................................
2. வாக்காளர் பட்டியலில் குறிப்பிட்டுள்ள வாக்காளரின் தொடர் எண். ..............................................
3. வாக்குப்பதிவு அலுவலரின் சுருக்கொப்பம். ..............................................

# இரண்டாவது வாக்குப்பதிவு அலுவலர்

- அழியாத மைக்கான பொறுப்பு அலுவலர்
- வாக்காளரின் இடது கை ஆள்காட்டி விரலில் விரல் நகத்தின் மேலிருந்து கீழ் தோல் பகுதிவரை அழியாத மையினால் கோடிட்டு மை நன்றாகப் பரவும்படி அழியாத மையினால் அடையாளம் ஒன்றை இட வேண்டும்.
- வாக்காளரின் விரலில் அடையாளம் இடுவதற்கு முன்னால் விரலில் எண்ணெய் போன்ற பொருள் ஏதாவது இருந்தால் அதைத் துணியினால் துடைத்து நீக்கி விட வேண்டும்.
    - இடது கையில் ஆள்காட்டி விரல் இல்லையென்றால் இடது பக்கத்திலுள்ள அடுத்த விரல் ஏதேனும் ஒன்றில் மையிடலாம்.
    - இடது கையில் விரல்களே இல்லை என்றால் வலக்கை ஆள்காட்டி விரல் அல்லது அதே போல் பக்கத்திலுள்ள வேறு விரல் ஏதேனும் ஒன்றில் மையிடலாம்.
    - இரண்டு கைகளிலும் விரல்களே இல்லையென்றால் அவரது இடது அல்லது வலது கையின் முனையில் மையிட வேண்டும்.

# இரண்டாவது வாக்குப்பதிவு அலுவலர்

- ஆள்காட்டி விரலில் அடையாளக் குறியை இட்டவுடன் அதனை அழித்துவிடாமல் பார்த்து கொள்ள வேண்டும்.

**வாக்களிக்க அனுமதி மறுப்பு**

- விரலில் ஏற்கெனவே அடையாளக் குறி இருத்தல்
- வாக்காளர் விரலில் அடையாளக் குறியிட மறுத்தல்
- மையை அகற்றுவதற்கு எச்செயலேனும் செய்தல்

**வாக்காளர் எவரேனும் சரும நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், அவருக்கு குறியிட, மற்றவர்களுக்கென அளிக்கப்பட்ட பொதுவான பிளாஸ்டிக் குச்சியை பயன்படுத்தக் கூடாது. அத்தகைய வாக்காளர் ஒவ்வொருவருக்கும் குறியிடுவதற்காக வெவ்வேறு தனித்தனி சிறு குச்சியை பயன்படுத்தி விட்டு உடனடியாக அவற்றை எறிந்து விட வேண்டும்.**

# இரண்டாவது வாக்குப்பதிவு அலுவலர்

ஏற்கெனவே தேர்தல் நடந்து இரத்து செய்யப்பட்டு மறு வாக்குப்பதிவு (Fresh poll) நடக்கும் பட்சத்தில் வாக்காளர்களின் இடது கை நடுவிரலில் அழியாத மை இட வேண்டும். ஏனெனில் வாக்காளர்களின் இடது கை ஆட்காட்டி விரலில் ஏற்கெனவே அழியாத மை இடப்பட்டிருக்கலாம். **(விரல்கள் இல்லாதவர்களுக்கு)**

வாக்காளருக்கு அடையாள மையிட்ட பின்னர், வாக்காளர் பதிவேட்டில் (படிவம் **21)** பதிவுகளை மேற்கொள்ளவும், **உறுப்பினர்/கவுன்சிலர்** தேர்தலில் வாக்களிப்பதற்கான துண்டுச்சீட்டை பெற்றுக் கொள்ளவும் வாக்காளரை முதலாம் வாக்குப்பதிவு அலுவலரிடம் அனுப்பி வைத்திட வேண்டும்.

# மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர்

- கட்டுப்பாட்டு கருவி இவருடைய பொறுப்பிலிருக்கும்.
- முதலாவது வாக்குப்பதிவு அலுவலரால் வழங்கப்பட்ட துண்டு சீட்டினை (voters slip) வாக்காளரிடமிருந்து பெற்று கொள்ள வேண்டும்.
- துண்டு சீட்டில் குறிப்பிட்டுள்ள வரிசை எண் படியே சற்றும் முறை பிறழாமல் வாக்காளரை வாக்களிப்பு பகுதிக்கு அனுப்ப வேண்டும்.
- தேர்தலுக்கான கட்டுப்பாட்டு கருவியின் (control ரவை) தொடர்புடைய பொத்தானை (button) அழுத்தி வாக்களிப்பு மறைவு பகுதியில் உள்ள வாக்குப்பதிவு கருவியினை / கருவிகளை (balloting unit) செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

# மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர்

- வாக்காளர் வாக்களிப்பு மறைவு பகுதிக்கு செல்வதற்கு முன்னர் அவரது இடது கை ஆள்காட்டி விரலில் அடையாள மை இடப்பட்டமைக்கான அடையாளம் உள்ளதா என்பதையும் மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர் பரிசீலித்து உறுதி செய்து கொண்டு **வாக்காளரை வாக்குச்சாவடியினை விட்டு வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும்.**
- வாக்குப்பதிவு தொடங்கிய பின்னர் ஒவ்வொரு மணி நேரத்திலும் அதுவரை பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை வாக்காளர் பதிவேட்டின் எண்ணிக்கையை கட்டுப்பாட்டு கருவியில் தெரிகின்ற மொத்த எண்ணிக்கையை ஒப்பிட்டு சரிபார்த்து கொள்ள வேண்டும்.

# வாக்குச்சாவடி தலைமை அலுவலர்

- வாக்குப்பதிவுக் கருவிகளை வாக்குப்பதிவு அடைப்புப் பகுதிகளில் (voting compartments) வைத்தல்.
- வாக்குப்பதிவுக் கருவி(களை) கட்டுப்பாட்டுக் கருவியுடன் இணைத்தல்.
- மின் சக்தி இணைப்பைக் கொடுத்தல்.
- வாக்குப்பதிவு நடைபெறும் நேரத்திற்கு **ஒரு மணி நேரம் முன்னதாக**, அங்கு வந்துள்ள வேட்பாளர்கள் / முகவர்கள் ஆகியோருக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காலியாகவும் வாக்குப் பதிவு எவையும் செய்யப்படாமல் உள்ளன என்றும் விளக்கிக் காட்டுதல்.

# வாக்குச்சாவடி தலைமை அலுவலர்

- வாக்குப்பதிவு, தேர்தல் ஆணையத்தால் **நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் துவங்கப்படல்** வேண்டும். வாக்குப்பதிவினைத் துவங்குவதற்குமுன், வருகை தந்துள்ள வேட்பாளர்கள் அல்லது அவர்களின் முகவர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் ஆகியோர்களுக்கு வாக்குப் பதிவு இரகசியம் பராமரிக்கப்படல் குறித்து எச்சரிக்கப்படல் வேண்டும். மற்றும் வாக்குப்பதிவு இரகசியம் பராமரித்தல் குறித்தான சட்டக்கூறுகளின்படி அவர்களது கடமைகள் குறித்தும் விதிகளை மீறினால் ஏற்படும் தண்டனைகள் குறித்தும் எச்சரித்து எடுத்துரைத்தல் வேண்டும்.
- குறிப்பிட்ட வேட்பாளர் ஒருவருக்கு அளிக்கப்படும் வாக்கு அவருக்குச் சாதகமாகவே பதிவாகும் என்பதைக் காட்டுவதற்காக ஒத்திகை வாக்குப்பதிவை நடத்துதல்.
- கட்டுப்பாட்டுக் கருவியில் பொருத்தப்பட்டுள்ள நீலநிறத் தாள் முத்திரையில் (Blue paper seal) வேட்பாளர்கள் அல்லது அவர்களுடைய முகவர்களின் கையொப்பத்தை பெறுதல்.

# வாக்குச்சாவடி தலைமை அலுவலர்

- வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்னதாகவே வாக்குச்சாவடி அலுவலர்கள் அனைவரும் உரிய இடத்தில் உள்ளனரா என்றும் வாக்குப்பதிவுப் பொருட்கள் மற்றும் பதிவேடுகள் கையடக்கமாகவும், உரிய நேரத்தில் வாக்குப்பதிவைத் தொடங்குவதற்குத் தயாராகவும் வைக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ளுதல்.
- **வாக்குப்பதிவு நடைபெற்று வரும்போது, வாக்காளர்களின் நடமாட்டத்தை உன்னிப்பாக கண்காணித்து வாக்காளர் எவரும் வாக்களிக்காமல் சென்று விடாமல் மிகவும் விழிப்புடன் கண்காணித்தல்.**
- பொதுவாகவே, வாக்குப்பதிவு தொடங்கிய முதல் மணி நேரத்தில் வாக்களிப்பு சுறுசுறுப்புடன் நடைபெறும் என்பதால் வாக்குச்சாவடி அலுவலர் எவரும் அவருக்கு ஒதுக்கப்பட்ட பணியில் எவ்வித சுணக்கமும் காட்டாதவாறு இருக்கும்படி பார்த்துக் கொள்ளுதல்.

# வாக்குச்சாவடி தலைமை அலுவலர்

- வாக்காளர்கள் அவர்களின் வரிசை எண்படி முறையாக வாக்குகளைப் பதிவு செய்துள்ளனரா என்பதை அறிய கட்டுப்பாட்டுக் கருவியில், தெரியும் பதிவான வாக்குகளின் மொத்த எண்ணிக்கையை அவ்வப்போது சரிபார்த்தல்.
- வேட்பாளர்களின் முகவர்களுக்கு படிவம் 23–ன் நகல்கள் வழங்கப்படுவதை உறுதி செய்து கொள்ளுதல்.
- வாக்குச்சாவடியினுள் இருக்கும் எந்த ஒரு நபரும் ஒரு வாக்காளரை ஒரு குறிப்பிட்டச் சின்னத்தில் / ஒரு குறிப்பிட்ட நபருக்கு வாக்களிக்க தூண்டவோ அல்லது தூண்ட முயற்சிக்கவோ கூடாது.

வாக்குப்பதிவு துவங்கப்படும் பொழுது, நீங்கள் வாக்குப்பதிவு இயந்திரத்தின் செயல்முறை விளக்கம், குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் பதிவேடு ஆகியவை குறித்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் உறுதிமொழி அளித்து வருகை தந்துள்ள வேட்பாளர்கள் அல்லது அவர்களது வாக்குப்பதிவு முகவர்களிடம் கையொப்பம் பெற வேண்டும்.

# வாக்குச்சாவடி தலைமை அலுவலர்

வாக்காளர் அடையாளம் காணப்பட்டவுடன் அவ்வாக்காளர் தொடர்பாக குறியீடு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலில் (களில்) உள்ள பதிவு அடிக்கோடிடப்படல் வேண்டும். பெண் வாக்காளராக இருப்பின் பெண் வாக்காளரின் பெயரின் இடப்பக்கத்தில் ஒரு டிக் (✓) குறியீடும் இடப்படல் வேண்டும்.

குறியீடு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல்களில் உள்ளவாறு வாக்காளரது தொடர் எண் (பெயரல்ல) வாக்காளர் பதிவேடுகளில் (படிவம் 21) குறிக்கப்படல் வேண்டும்.

வாக்காளர் வாக்குப்பதிவிற்கு அனுமதிக்கப்படுவதற்கு முன் அவரது கையொப்பம் அல்லது இடது கை பெருவிரல் பதிவினை வாக்காளர் பதிவேட்டில் (படிவம் 21) (Register of Electors) பெறப்படல் வேண்டும். ஒரு வாக்காளர் தனது கையொப்பத்தினையோ அல்லது இடது கை பெருவிரல் பதிவினையோ வாக்காளர்கள் பதிவேட்டில் இட மறுத்தால் அவரை வாக்களிக்க அனுமதிக்கத் தேவையில்லை. வாக்களிக்க மறுக்கப்பட்டது என்று வாக்காளர் பதிவேட்டில் குறிப்புரைகளுக்கான நெடும்பத்தியில் பதிவு செய்ய வேண்டும். அத்தகைய பதிவுக்குக் கீழ் நீங்கள் கையொப்பமிட வேண்டும்.

# வாக்குச்சாவடி தலைமை அலுவலர்

வாக்காளர்கள் பதிவேட்டில் கையொப்பம் அல்லது இடது கைப் பெருவிரல் பதிவு பெறப்பட்டவுடன் வாக்காளர்கள் பதிவேட்டில் அவர் தொடர்புடைய பதிவுகளின் தொடர் எண் விவரங்களடங்கிய வாக்காளர் துண்டு சீட்டு (voter slip) (உரிய படிவத்தில்) வழங்கப்படல் வேண்டும்.

வாக்காளர்கள் பதிவேட்டில் பதியப்பட்டவாறு வழங்கப்பட்ட வாக்காளர் துண்டு சீட்டின் தொடர் எண் அடிப்படையில்தான் வாக்காளர் தனது வாக்கினை வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவு செய்ய அனுமதிக்கப்படல் வேண்டும்.

நீங்கள் அவ்வப்போது நிகழும் தொடர்புடைய நிகழ்வுகளை வாக்குச்சாவடி தலைமை அலுவலர் குறிப்பேட்டில் (Presiding Officers Diary) பதிவு செய்திடல் வேண்டும்.

தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்குப்பதிவு முடிக்கப்படல் வேண்டும். இருப்பினும் வாக்குப்பதிவு முடிவு பெறும் நேரத்தில் (அதாவது மாலை 5.00 மணிக்கு) வாக்குச்சாவடிக்கு வந்துள்ள அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்க அனுமதிக்கப்படல் வேண்டும். இதற்கென வரிசையில் உள்ள வாக்காளர்களுக்கு (வரிசையின் கடைசியிலிருந்து) துண்டுச் சீட்டுகளை வழங்கிட வேண்டும்.

# வாக்குச்சாவடி தலைமை அலுவலர்

- **வாக்குப்பதிவு முடிவுறும் போது பதிவான வாக்குகள் குறித்த கணக்கினை (Account of Votes Recorded) படிவம் 23–ல் பகுதி–1ல் தயார் செய்திடல் வேண்டும்.** மேற்படி கணக்கின் பிரதிகளை வாக்குச்சாவடியில் உள்ள வேட்பாளர்களின் வாக்குச்சாவடி முகவர்களுக்கு வழங்குதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்டமைக்கான உறுதிமொழியினையும் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அளித்திட வேண்டும்.
- வாக்குப்பதிவு முடிவுற்றதும், வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் தேர்தல் தொடர்பான அனைத்து ஆவணங்களும் தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட முறைப்படி மூடி முத்திரையிடப்பட்டு பாதுகாக்கப்படல் வேண்டும். வேட்பாளர்கள் அல்லது அவர்களது முகவர்கள் எவரேனும் விரும்பினால் அவர்கள் தங்கள் முத்திரைகளை வாக்குப் பதிவு இயந்திரங்களின் மேலும் தேர்தல் ஆவணங்களின் மேலும் வைக்க அனுமதிக்கலாம். தவறுகள் ஏதும் நிகழாவண்ணம் வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் தேர்தல் ஆவணங்களை மூடி முத்திரையிட்டு பாதுகாத்தல் குறித்தான தொடர்புடைய அறிவுரைகளை கவனத்துடன் பின்பற்றுதல் வேண்டும்.
- வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் அனைத்துத் தேர்தல் ஆவணங்களையும் முறையாக மூடி முத்திரையிட்டு பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் உரிய சான்றின் பேரில் ஒப்படைப்பது தங்களது முழுப் பொறுப்பாகும்.

# வாக்குப்பதிவு முடிவுறும் நேரம்

- வாக்குப்பதிவு உரிய நேரத்தில் முடிவடைவதை கவனித்துக் கொள்ள வேண்டும்.
- கடைசியாக வாக்களிக்கும் வாக்காளர் வாக்களித்து முடித்தவுடன், பயன்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டுக் கருவியின் முடிவு (close) பொத்தானை அவர் அழுத்தி வாக்குப்பதிவை முடிக்க வேண்டும்.
- தேர்தல்கள் தொடர்பான வரையறுக்கப்பட்ட படிவங்கள் கவனமாகவும் உரியவாறும் நிரப்பப்பட்ட பின்னர், வாக்குப் பதிவுக் கருவிகளுக்கு கட்டுப்பாட்டு கருவிகளிலிருந்து வரும் தொடர்பை துண்டித்து விட வேண்டும். பின்னர், அவற்றை எடுத்துச் செல்லும் பெட்டியில் வைத்து முத்திரையிடல் வேண்டும்.
- வாக்குப்பதிவுக் கருவிகள் எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்படும் பெட்டிகளில் சம்பந்தப்பட்ட தேர்தல் தொடர்பான அடையாளம் காட்டும் துண்டுச் சீட்டினை அப்பெட்டிகளின் மேற்புறத்தில் ஒட்டி வைக்க வேண்டும்.

- **தேர்தல் அடையாளம் காட்டும் துண்டுச் சீட்டு?** நன்கு ஒட்டப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட எடுத்துச் செல்லும் பெட்டிகளிலேயே வாக்குப்பதிவுக் கருவி மற்றும் கட்டுப்பாட்டுக் கருவி உரியவாறு வைக்கப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், உரியவாறு நிரப்பப்பட்ட முகவரி அட்டைகளை சம்பந்தப்பட்ட எடுத்துச் செல்லும் பெட்டிகளில் அவர் ஒட்ட வேண்டும்.
- முத்திரையிடப்பட்ட அனைத்துக் கருவிகள் மற்றும் தேர்தல் தொடர்புடைய பதிவேடுகள் ஆகியவை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் ஒப்படைக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

வரையறுக்கப்பட்ட நேரத்தில் வாக்குப்பதிவு முடிந்ததும், வாக்குச் சாவடித் தலைமை அலுவலர், ஒட்டுத்தாள் முத்திரைக்கு சேதமின்றி, வாக்குப்பதிவு குளோஸ் பொத்தானின் மூடியைத் திறந்து வாக்குப்பதிவை முடிக்கும் வகையில், வாக்குப்பதிவு இயந்திரத்தின் குளோஸ் பொத்தானை அழுத்திவிட்டு, மீண்டும் அதன் மூடியைப் பொருத்தி விடவேண்டும். வாக்குப்பதிவின் முடிவில் ஏனைய நடைமுறைகள் முடிக்கப்பட்ட பின்னர், வாக்குச் சாவடித் தலைமை அலுவலர், கட்டுப்பாட்டுக் கருவியை, அதற்குரிய தனித்தனிப் பெட்டிகளில் கவனமாக வைத்து முகவரி விவரக் குறிப்புச் சீட்டுடன் அத்தனிப்பெட்டியை முத்திரையிட வேண்டும். இவ்வாறு முத்திரையிடப்பட்ட பெட்டி வாக்கு எண்ணுகை மையத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

# வாக்குச்சாவடிக்குள் நுழைய உரிமை உள்ளவர்கள்

- **தேர்தல் பணியாற்றும் அரசு ஊழியர்கள், தேர்தல் அலுவலர்கள், மாநில, மாவட்டத் தேர்தல் அலுவலர்** மற்றும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஏனைய நபர்கள்
- தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள **தேர்தல் பார்வையாளர்கள்**
- **வேட்பாளர்**, அவரது தேர்தல் முகவர் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள்
- வாக்காளருடன் வரும் **கைக்குழந்தைகள்**
- **பிறர் உதவியின்றி நடமாட முடியாத**, பார்வையற்ற மற்றும் உடல் ஊனமுற்ற வாக்காளருக்குத் துணையாக வரும் நபர்
- தேவை ஏற்படும்போது மட்டுமே வாக்காளர்களை அடையாளம் காணுவதற்கு வாக்காளர்களை **அடையாளம் தெரிந்துகொள்வதற்கு** (கிராம நிர்வாக அலுவலர் அல்லது பெண் உதவியாளர்) / **சோதனையிடுவதற்கு** (காவல்துறை அலுவலர்கள்) உதவியாக வாக்குச்சாவடித் தலைமை அலுவலரால் அவ்வப்போது அனுமதிக்கப்படும் ஏனைய நபர்கள்.

# வாக்குச்சாவடிக்குள் நுழைய உரிமை இல்லாதவர்கள்

- மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வேட்பாளராக அல்லாத தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள்
- வாக்காளர், வேட்பாளர், தேர்தல் முகவர் மற்றும் வாக்குச்சாவடி முகவர் **ஆகியவருடன் வரும் பாதுகாப்பு அலுவலர்**

**அடையாள அட்டை**

- வேட்பாளர்களுக்கென தேர்தல் நடத்தும் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டையை தேவையிருப்பின் வாக்குச்சாவடித் தலைமை அலுவலர் அதனைக் கோரிப்பெற்று சரிபார்த்து உறுதிசெய்துகொள்ளலாம்.
- தேர்தல் முகவர்களுக்கு தேர்தல் நடத்தும் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள புகைப்படத்துடன் கூடிய நியமன ஆணையின் நகலினையும் கோரிப்பெற்று சரிபார்க்கலாம்.

# அனுமதி

**அனுமதிக் கடிதம்**

- வாக்குச்சாவடியினுள் அனுமதிக்கப்படுவதற்கான அனுமதிக் கடிதம் வைத்திருப்பவராயினும் அவர் மீது உங்களுக்கு சந்தேகம் எழுமாயின் அவரை நீங்கள் சோதனைக்கு உட்படுத்தலாம்.
- உரிய அனுமதிக்கடிதம் இல்லாத எவரையும் வாக்குச்சாவடியினுள் அனுமதிக்கக் கூடாது.

**வாக்குச்சாவடியினுள் புகைபிடிப்பது மற்றும் கைப்பேசி (செல்) பயன்படுத்துதல்**

- வாக்குச்சாவடியினுள் எவரும் புகைபிடிக்க நீங்கள் அனுமதிக்கக் கூடாது.
- வாக்குச்சாவடி முகவர்கள் வாக்குச்சாவடிக்குள் கைப்பேசி (செல்) பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது (தேர்தல் அலுவலர்கள், வேட்பாளர்கள், பயன்படுத்தலாம்).

# தேர்தல் பார்வையாளருக்கான வசதிகள்

**பத்திரிக்கை நிருபர்களுக்கும் புகைப்படம் எடுப்பவர்களுக்குமான வசதிகள்**

- புகைப்படம் எடுப்பவர்கள் வாக்காளர்கள் வரிசையாக நிற்பதை அமைதிக்கு இடையூறின்றி புகைப்படம் எடுப்பதற்கு தடையேதும் இல்லை.
- ஆனால், வாக்காளர் ஒருவர் தனது வாக்கினை பதிவு செய்கையில் எக்காரணம் கொண்டும் புகைப்படம் எடுக்க அனுமதிக்கக் கூடாது.

**தேர்தல் பார்வையாளருக்கான வசதிகள்**

- தேர்தல் பார்வையாளர்கள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தினால் வழங்கப்பட்ட நியமன ஆணையை வைத்திருப்பர்.
- வாக்குச்சாவடிக்குத் தேர்தல் பார்வையாளர்கள் வருகை தரும்போது அவர்களுக்கு உரிய மதிப்பும், மரியாதையும் அளிக்க வேண்டும்.
- தேர்தல் பார்வையாளர்கள் கூறும் ஆலோசனைகளைப் பரிசீலித்தல் வேண்டும்.
- வாக்குச் சாவடியில் தேர்தல் நடவடிக்கைகளில் ஏதேனும் சிரமம் அல்லது சிக்கல் இருந்தால் தேர்தல் பார்வையாளர்களிடம் தெரிவித்துத் தீர்வு காணலாம்.

# வாக்குப்பதிவு கருவிகள்

- வாக்குப்பதிவு கருவிகளை வாக்குப்பதிவு அன்று கட்டுப்பாட்டு கருவியுடன் மின்கம்பிகள் (கேபிள்) மூலம் பொருத்த வேண்டும்.
- தேவையான வாக்குப்பதிவு இயந்திரங்கள் / கருவிகள் வழங்கப்பட்டுள்ளனவா
- ஒவ்வொரு வாக்குப்பதிவுக் கருவியிலும் வாக்குச்சீட்டுக்கள் சரியான முறையில் வரிசைபடுத்தப்பட்டுள்ளனவா பொருத்தப்பட்டுள்ளனவா,
- வாக்குப்பதிவு கருவிகளின் மேலே வலது புறத்தில் உள்ள தள்ளு சுவிட்ச் (slide swtich) ஒவ்வொரு கருவியிலும் சரியான நிலையில் பொருத்தப்பட்டுள்ளனவா
- ஒவ்வொரு கருவியும் முறையாக முத்திரையிட்டு முகவரி அட்டைகள் **வலப்புற மேற்பகுதி மற்றும் வலப்புற அடிப்பகுதியில்** பொருத்தப்பட்டுள்ளனவா என்பதை சரிபார்த்தல் வேண்டும்.

# வாக்குப்பதிவுக் கருவிகளை ஒன்றோடொன்று இணைத்தல்

**வாக்குப்பதிவுக் கருவியையும் கட்டுப்பாட்டுக் கருவியையும் ஒன்றோடொன்று இணைத்தல்**

- முதல் வாக்குப்பதிவு கருவி கட்டுப்பாட்டு கருவியுடன் இணைக்கப்பட்டிருக்கும். இரண்டாவது வாக்குப்பதிவு கருவி முதலாவது வாக்குப்பதிவு கருவியுடனும், மூன்றாவது வாக்குப்பதிவு கருவி இரண்டாவது வாக்குப்பதிவு கருவியுடனும், நான்காவது வாக்குப்பதிவுக் கருவி மூன்றாவது வாக்குப்பதிவுக் கருவியுடனும், தொடர்ந்து இணைக்கப்படும்.

# கட்டுப்பாட்டுக் கருவியை தயார் செய்தல்

வாக்குச்சாவடித் தலைமை அலுவலரால் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் வருமாறு–

- ஒரு தேர்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குப்பதிவு கருவிகள் பயன்படுத்தும் நிலையில் அவைகளை ஒன்றுக்கொன்று இணைத்தல்
- கட்டுப்பாட்டுக் கருவியுடன் **(control unit)** முதல் வாக்குப்பதிவு கருவியை **(balloting unit)** இணைத்தல்**.**
- கட்டுப்பாட்டுக் கருவியில் உள்ள மின் சக்தி சுவிட்சை **(power switch)** இயங்கும் நிலைக்கு **(ON)** கொண்டு வருதல்
- கட்டுப்பாட்டுக் கருவியின் பின்புறப் பகுதியினை **(rear compartment)** மூடுதல்**.**
- ஒத்திகை வாக்குப்பதிவினை நடத்துதல்

# வாக்குப்பதிவு ஒத்திகை –CLOSE–RESULT– CLEAR

- வாக்குப்பதிவு துவங்குவதற்கு முன் வருகை தந்துள்ள வாக்குச்சாவடி முகவர்களுக்கு ஒத்திகை வாக்குப்பதிவு (mock poll) நடத்தி வாக்குகளை ஒவ்வொரு போட்டியிடும் வேட்பாளருக்கும் பதிவு செய்து முடிவினை ஒத்திசைவு செய்து காண்பித்தல் வேண்டும்.

- ஒத்திகை வாக்குப்பதிவு நடத்திய பின்னர் அதில் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் வாக்குப்பதிவு இயந்திரத்தின் நினைவாற்றலில் (memory) இல்லா வண்ணம் நீக்கப்படல் வேண்டும்.

- வாக்குப்பதிவு இயந்திரத்தின் கட்டுப்பாட்டுக் கருவியில் தாள் முத்திரைகள், ஒட்டுத்தாள் முத்திரை மற்றும் சிறப்பு அட்டை ஆகியவற்றின் மூலம் மூடி முத்திரையிட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும்.

# வாக்குப்பதிவு ஒத்திகை

- **முதலில் கிளியர்** (clear) பொத்தானை அழுத்தி அனைத்தும் **பூஜ்யத்தில் (zero)** இருப்பதை வருகை தந்துள்ள அனைவருக்கும் காண்பித்தல் வேண்டும்.

- பின்னர் **ஒவ்வொரு வேட்பாளருக்கும் வாக்குகளை பதிவு செய்து** ஒத்திகை வாக்குப்பதிவினை நடத்துதல் வேண்டும்.

- **கட்டுப்பாட்டுக் கருவியின்** (Control unit) **வாக்குப்பதிவு** (Ballot) பொத்தானை அழுத்துவதனால் காட்சிப் பிரிவில் (Display section) உள்ள பிஸி (Busy) விளக்கு **சிவப்பு நிறத்தில்** எரியும்.
- அதே நேரத்தில், **வாக்குப்பதிவுக் கருவியின்** மீதுள்ள தயார் (Ready) விளக்கும் **பச்சை நிறத்தில்** எரியத் துவங்கும்.


# வாக்குப்பதிவு ஒத்திகை

- வாக்குச் சாவடி முகவரை அவரது விருப்பத்திற்கேற்ப வாக்குப்பதிவுக் கருவியின் மீதுள்ள ஏதாவதொரு வேட்பாளரது பொத்தானை அழுத்துமாறு கோரவும்.
- அவ்வாறு வேட்பாளர் பொத்தான் அழுத்தப்பட்டதும் வாக்குப்பதிவுக் கருவியின் மீதுள்ள தயார் (Ready) **பச்சை விளக்கு** அணைந்து விடும். வேட்பாளர் பொத்தானுக்கு அருகிலுள்ள வேட்பாளர் விளக்கும் **சிவப்பு நிறத்தில்** எரியத் துவங்கும். கட்டுப்பாட்டுக் கருவியிலிருந்து ஒரு பீப் (beep) ஒலியும் வெளிவரும். சில விநாடிகளுக்குப் பிறகு வேட்பாளர் விளக்கில் சிவப்பு ஒளியும் (light), பிஸி (Busy) விளக்கின் சிவப்பு ஒளியும் (light) மற்றும் பீப் (beep) ஒலியும் நின்றுவிடும்.
- இந்நிகழ்வு, கட்டுப்பாட்டுக் கருவியில் (control unit) பதிவு ஆகிவிட்டது என்பதையும் வாக்குப்பதிவு இயந்திரம் அடுத்த வாக்கினைப் பெற்றுக் கொள்ள தயார் ஆகி விட்டது என்பதையும் தெளிவாக்குகின்றது.

# வாக்குப்பதிவு ஒத்திகை முடிவு

- மீதமுள்ள வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாக்குகளைப் பதிவு செய்யவும்.
- இவ்வாறு ஒவ்வொரு வேட்பாளருக்கும் **பதிவு செய்யப்பட்ட வாக்குகள் குறித்தான கணக்கினைக் கவனமாக வைத்துக் கொள்ளவும்.**
- இவ்வாறு வாக்குகள் பதிவு செய்யப்படும் போது அதுவரை பதிவு செய்யப்பட்ட வாக்குகளையும் வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகளையும் ஒப்பீடு செய்து சரிபார்த்துக் கொள்ளக் கட்டுப்பாட்டுக் கருவியின் (control unit) மொத்தம் (Total) பொத்தானை அழுத்தவும்.
- **ஒத்திகை வாக்குப்பதிவு முடிவுறும் போது** வாக்கு முடிவுப் பிரிவில் (Result section) உள்ள **குளோஸ் (close) பொத்தானை** அழுத்தவும். அவ்வாறு குளோஸ் (close) பட்டன் அழுத்தப்படும் போது காட்சிப் பிரிவில் உள்ள காட்சித் திரையில் கீழ்க்காணும் தகவல்கள் தொடர்ச்சியாகக் காட்சியளிக்கும்.

# வாக்குப்பதிவு ஒத்திகை முடிவு




தற்போது வாக்கு முடிவு (Result section) உள்ள **வாக்குப்பதிவு முடிவு** (Result) என்று குறிப்பிடப்பட்டுள்ள பொத்தானை அழுத்தவும். அந்தப்பட்டன் அழுத்தப்பட்டதும் காட்சித் திரையில் (Display panels) கீழ்க்காணும் தகவல்கள் தொடர்ச்சியாகத் தோன்றும்.


# வாக்குப்பதிவு ஒத்திகை

| Display | Explanation |
|---|---|
| COMPUTING RESULT | |
| POLL RESULT PDT 12-01-07 | (PDT - Poll date) |
| PST 06-55-20 | (PST - Poll start time) |
| PET 06-32-10 | (PET - Poll end time) |
| SL NO-H00003 | (Serial number of Control Unit PCB) |
| CANDIDATES 9 | (The number of candidates - 9) |
| TOTAL POLLED VOTES - 54 | (The number of polled votes - 54) |
| CANDIDATE-01 VOTES - 6 | |
| CANDIDATE-02 VOTES - 6 | |
| CANDIDATE-03 VOTES - 6 | |
| CANDIDATE-04 VOTES - 6 | |
| CANDIDATE-05 VOTES - 6 | |
| CANDIDATE-06 VOTES - 6 | |
| CANDIDATE-07 VOTES - 6 | |
| CANDIDATE-08 VOTES - 6 | |
| CANDIDATE-09 VOTES - 6 | |
| END | |

# வாக்குப்பதிவுக்கு தயார் செய்தல்

- அடுத்ததாக ஒத்திகை வாக்குப்பதிவில் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் குறித்தான கணக்கினை நீக்கும் பொருட்டு **கிளியர் (**clear**) பொத்தானை** அழுத்தவும். **அவ்வாறு கிளியர் (clear) பட்டன் அழுத்தப்படுவதானால் அனைத்து எண்ணிக்கையும் பூஜ்யமாக (zero) காட்சியளிக்கும்.**
- இந்த இயக்கமானது (clearing) சுமார் 14 வினாடிகள் எடுத்துக் கொள்ளும்.
- “கிளியர்” (clear) பட்டன் அழுத்தப்பட்ட உடன் கட்டுப்பாட்டுக் கருவியிலுள்ள காட்சித் திரைகளில் (display panels) கீழ்குறிப்பிட்டுள்ள தகவல்கள் தொடர்ச்சியாக காட்சியளிக்கத் துவங்கும்.
- **மின் சுவிட்சை இயங்கா நிலைக்கு (OFF) கொண்டு வருதல்**

# வாக்குப்பதிவுக்கு தயார் செய்தல்




(ஒவ்வொரு indication காட்டப்படும் போதும் தொடர்ந்து ஒரு பீப் ஒலி எழும்பும்)

# வாக்குப்பதிவுக்கு தயார் செய்தல்

- வாக்குப்பதிவு இயந்திரம் 9 வேட்பாளர்களுக்கு அமைக்கப் பெறுவதாகக் கருதி (Assumption) மேற்படி உதாரணம் வழங்கப்பட்டுள்ளது.
- மேற்குறிப்பிட்டவாறு தகவல்கள் காட்சித்திரையில் (Display Panels) காண்பிக்கப்படுவதன் மூலம் வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்குகள் ஏதும் முன்னதாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது குறித்து வாக்குச்சாவடியில் வருகை தந்துள்ள வாக்குச் சாவடி முகவர்கள் ஐயமறத் தெரிவர்.


# கட்டுப்பாட்டுக் கருவியில் தாள் முத்திரையைப் பொருத்துதல்

- கட்டுப்பாட்டுக் கருவியில் வாக்கு முடிவுப் பிரிவின் (Result section) கதவின் உட்பக்கம் தாள் முத்திரையைப் பொருத்தும் வகையில் உள்ள சட்டத்தில் (frame) தாள் முத்திரையினைப் பொருத்த வேண்டும்.
- இந்தச் சட்டத்தில் (frame), **தாள் முத்திரையின் நீலநிறப் பகுதி கட்டுப்பாட்டுக் கருவியின் வெளிப்புறம்** உள்ள துவாரத்தின் வழியே தெரியுமாறும் தாள்முத்திரையின் **தொடர் எண் கட்டுப்பாட்டுக் கருவியின் உள்பக்கத்தில்** உள்ளவாறு சரியான நிலையில் பொருத்தப்பட வேண்டும்.

# கட்டுப்பாட்டுக் கருவியில் தாள் முத்திரையைப் பொருத்துதல்

- கட்டுப்பாட்டு அலகில் தாள்முத்திரையினை பொருத்திய பின்னர், உட்பக்க அறைக் கதவை இறுக்கமாக அழுத்தி மூடிவிட வேண்டும். தாள் முத்திரையின் இரு முனைகளும் உட்பக்க அறையின் பக்கங்களிலிருந்து வெளிக்கதவின் இருபக்கங்களில் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். நீண்டிருக்கும் தாள் முத்திரையின் **வெள்ளை நிறப் பிரிவில் அச்சடிக்கப்பட்ட தொடர் எண்ணுக்குக் கீழே உங்களது முழுக் கையொப்பத்தினை இட வேண்டும். அதில் வாக்குச் சாவடிக்குள் வந்திருக்கும் வேட்பாளர் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் விரும்பினால் அவர்கள் கையொப்பத்தினையும் பெறவேண்டும்.**
- **எந்த நிலையிலும் சேதமடைந்த தாள் முத்திரைகளை பொருத்தக் கூடாது.**

# கட்டுப்பாட்டுக் கருவியில் தாள் முத்திரையைப் பொருத்துதல்




Fixing of green paper seal

- வாக்குச்சாவடிக்கென வழங்கப்பட்ட தாள் முத்திரைகள் (Paper seal) மற்றும் பயன்படுத்தப்பட்ட தாள்முத்திரைகளின் கணக்கினை உரிய படிவத்தில் தயாரிக்க வேண்டும்.
- வாக்குச்சாவடிக்கு வழங்கப்பட்ட தாள் முத்திரைகளின் தொடர் எண்களையும், பயன்படுத்தப்பட்ட தாள் முத்திரைகளின் தொடர் எண்களையும் வாக்குச்சாவடிக்கு வந்திருக்கும் வேட்பாளர்களும் வாக்குச்சாவடி முகவர்களும் குறித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

# சிறப்பு அட்டை

**கட்டுப்பாட்டுக் கருவியை மூடி முத்திரையிடுதல்**

**தேர்தல் முடிவு பிரிவிற்கான சிறப்பு அட்டை** பின்வருமாறு தோற்றமளிக்கிறது




- **வெள்ளை நிறத்தில் இருக்கும் சிறப்பு அட்டை** மீது **கட்டுப்பாட்டுக் கருவியின் தொடர் எண்ணை** எழுத வேண்டும்.
- தொடர் எண்ணை எழுதிய பின்னர் **சிறப்பு அட்டையின் பின்பக்கத்தில்** உங்களுடைய கையொப்பத்தை இட வேண்டும்.
- **வேட்பாளர்கள் / வாக்குச்சாவடி முகவர்களில்** கையொப்பமிட விரும்புகிறவர்களை, **சிறப்பு அட்டையின் பின்பக்கத்தில் கையொப்பம்** இடுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

# சிறப்பு அட்டை


- தொடர் எண்ணை நீங்கள் படிப்பதோடு, வந்திருக்கும் வேட்பாளர்களிடம்/வாக்குச்சாவடி முகவர்களிடம் அந்தத் தொடர் எண்ணைக் குறித்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ள வேண்டும்.
- **ஏதேனும் ஒரு காரணத்தினால் சிறப்பு அட்டை சேதமடையுமாயின் அல்லது கிழிந்து போகுமாயின் நீங்கள் இன்னொன்றைப் பயன்படுத்த வேண்டும்.**




# வாக்குப்பதிவு முடிவுப் பிரிவின் மேல் மூடியை மூடி முத்திரையிடுதல்

- கட்டுப்பாட்டுக் கருவியின் உட்புற பகுதியை மூடி, முத்திரையிட்ட பின்னர் அப்பிரிவை மூடுவதற்காக **வாக்குப்பதிவு முடிவுப்பிரிவின் மேல்மூடியை** அழுத்தி மூட வேண்டும்.
- மேல் மூடியை அழுத்தி மூடுவதற்கு முன்னர் தாள் **முத்திரையின் இருமுனைகளும்** மேல் மூடியின் இரு பக்கங்களிலும் **வெளிப்புறமாக நீட்டிக் கொண்டிருப்பதை** உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- வாக்குப்பதிவு முடிவுப் பிரிவின் மேல் மூடியை மூடிய பின்னர் அந்த மேல் மூடியின் (I) இடது பக்கத்தில் இதற்காக அமைக்கப்பட்டுள்ள இரு துளைகளில் நூல் ஒன்றினைச் செலுத்தி (ii) அந்த நூலின் இருமுனைகளை ஒன்றாக முடிச்சிட்டு (knot) (iii) தேர்தல் நடத்தும் அலுவலர் அளவில் வேட்பாளர் பெயர் விவரத் தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ளதை போன்று குறிப்புச் சீட்டு ஒன்றினை (Address tag) இணைத்து முத்திரையிடப்பட வேண்டியதுடன் அரக்கு கொண்டு முகவரி அட்டை உள்ள **நூல் மீது அரக்கு வைத்து இதில் வாக்குச்சாவடி அலுவலரின் தலைமை முத்திரையை** பதிக்க வேண்டும்.

# வாக்குப்பதிவு முடிவுப் பிரிவின் மேல் மூடியை மூடி முத்திரையிடுதல்






# வாக்குப்பதிவு முடிவுப் பிரிவின் மேல் மூடியை மூடி முத்திரையிடுதல்

- தேர்தல் நடத்தும் அலுவலர் வாக்குப் பதிவிற்கான பொருட்களோடு அச்சிடப்பட்ட **வெற்று முகவரி அட்டைகளை** போதிய எண்ணிக்கையில் அளிப்பார். முகவரி அட்டையில் நீங்கள் விவரங்களை கவனமாகப் பூர்த்தி செய்ய வேண்டும். ஒவ்வொரு **கட்டுப்பாட்டுக் கருவியின் தொடர் எண்ணும் அதன் அடிப்பகுதியில் பொறிக்கப்பட்டிருக்கும்.**

- வேட்பாளர்கள் அல்லது வாக்குச்சாவடி முகவர்களை விரும்பினால் முகவரி அட்டையில் உங்களுடைய முத்திரையுடன் அவர்களின் முத்திரையும் வைக்கப்பட வேண்டும்.

# ஒட்டுத்தாள் முத்திரை

- ஒட்டுத்தாள் முத்திரை
- ஒட்டுத்தாள் முத்திரையின் வரைபடம்




# ஒட்டுத்தாள் முத்திரை

- **ஒட்டுத்தாள் முத்திரை பயன்படுத்துதல் உள்பட கட்டுப்பாட்டுக் கருவியினை மூடி முத்திரையிடும் முறை**
- ஒட்டுத்தாள் முத்திரை பின்னர் குளோஸ் பொத்தான்களுக்கு சிறிது கீழே இருக்கும் வகையில் பொருத்தப்பட வேண்டும்.
- ஒட்டுத்தாள் முத்திரை பொருத்துவதற்கு முன்னர் தாள் முத்திரையின் தொடர் எண்ணிற்குக் கீழே வாக்குச் சாவடி தலைமை அலுவலர் அவரது முழுமையான கையொப்பத்தை இட வேண்டும்.
- அங்கு வந்திருந்து, கையொப்பமிட விருப்பம் தெரிவிக்கும் வேட்பாளர்களிடமும் அல்லது வாக்குச்சாவடி முகவர்களிடமும் கையெழுத்துக்கள் பெற வேண்டும்.


# ஒட்டுத்தாள் முத்திரை

**ஒட்டுத்தாள் முத்திரை கொண்டு கட்டுப்பாட்டுக் கருவியை முத்திரையிட்டு மூடும் முறை**


**நடவடிக்கை – 1**




**நடவடிக்கை – 2**




**நடவடிக்கை – 3**





# ஒட்டுத்தாள் முத்திரை






நடவடிக்கை – 4





# ஒட்டுத்தாள் முத்திரை

## நடவடிக்கை – 5



**ஒட்டுத்தாள் முத்திரையை ஒட்டியப் பின்னர் :**

வாக்குச்சாவடித் தலைமை அலுவலர், வாக்குப்பதிவின் போது ஒட்டுத்தாள் முத்திரை முத்திரை சேதமுறாமல் அல்லது சிதைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இம்முத்திரை, வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு நடக்கும்போதோ அல்லது வாக்குப்பதிவு முடிந்த பின்னரோ நீக்கப்படக் கூடாது.

# ஒட்டுத்தாள் முத்திரை

- வாக்குப்பதிவு முடிவு பிரிவின் வெளிப்புறக் கதவிலுள்ள வாக்குப் பதிவு குளோஸ் பொத்தானின் கீழ் பகுதியை மூடும் வகையில் ஒட்டுத்தாள் முத்திரை இருக்க வேண்டும். இவ்வாறு ஒட்டுத்தாள் முத்திரையை வைக்கும்போது வாக்குப்பதிவு குளோஸ் பொத்தானுக்கு (close button) எந்தவித பாதிப்புமின்றி இருப்பதையும், இந்தப் பொத்தானை இயக்குவதற்கு எந்தவிதத் தடையும் இல்லாதவாறும், ஒட்டுத்தாள் முத்திரை எந்த ஒரு பகுதியும், மறைக்காமல் இருப்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- ஒட்டுத்தாள் முத்திரை நெகிழ்வின்றி, இறுக்கமாக இருத்தல் வேண்டும். தளர்வாக இருக்கக்கூடாது.

- சேதடைந்துள்ள ஒட்டுத்தாள் முத்திரைகளைப் பயன்படுத்தக்கூடாது.

- ஒவ்வொரு வாக்குக் சாவடிக்கும், நீலநிறத் தாள் முத்திரைகள் போன்று ஒன்று அல்லது இரண்டு ஒட்டுத்தாள் முத்திரைகள் வழங்கப்படும்.

# ஒட்டுத்தாள் முத்திரை

- வாக்குப்பதிவு நடத்துவதற்காக, வாக்குச்சாவடிக்கு வழங்கப்படும் ஒவ்வொரு ஒட்டுத்தாள் முத்திரைக்கும், வாக்குச் சாவடி தலைமை அலுவலர் கணக்கு வைக்க வேண்டும்.
- தற்செயலாக சேதமடைந்துவிட்ட ஒட்டுத்தாள் முத்திரை உட்பட (அல்லது அதன் துண்டுகள் உட்பட), பயன்படுத்தப்படாத ஒட்டுத்தாள் முத்திரைகள் அனைத்தும், தேர்தல் நடத்தும் அதிகாரிகளிடம் திருப்பி ஒப்படைத்துவிட வேண்டும். இத்தகைய ஒட்டுத்தாள் முத்திரை, யாதொரு நேரத்திலும், அனுமதியற்ற யாதொரு நபரின் கைகளில் காணப்பட்டால், இதற்குத் தேர்தல் நடத்தும் அலுவலரே பொறுப்பாவார்.
- வாக்குச்சாவடி ஒவ்வொன்றிற்கும் வழங்கப்பட்ட ஒட்டுத்தாள் முத்திரைகள் பற்றி விவரங்களை தேர்தல் நடத்தும் அலுவலர் ஒவ்வொருவரும் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும்.

# மின் சுவிட்ச் இயங்கும் நிலை

- மின்கலத்தினை (power pack) இயக்கக்கூடிய மின் சுவிட்சு (power switch) கட்டுப்பாட்டுக் கருவியின் பின்பகுதியில் பொறுத்தப்பட்டிருக்கும்.
- கட்டுப்பாட்டுக் கருவி மற்றும் வாக்குப்பதிவுக் கருவி/ கருவிகள் இணைக்கப்பட்ட பின்னர், மின் சுவிட்சானது இயங்கும் நிலையில் (ON position) வைக்கப்பட வேண்டும்.
- அதன் தொடர்ச்சியாக கட்டுப்பாட்டுக் கருவியிலிருந்து ஒரு பீப் ஒலி (beep sound) வெளிப்படும். மேலும், கட்டுப்பாட்டுக் கருவியின் காட்சிப் பிரிவில் (display section) உள்ள விளக்கு (ON lamp) பச்சை நிறத்தில் எரியும்.

# கட்டுப்பாட்டுக் கருவியின் பின் பகுதியினை மூடுதல்

- பின்னர் கட்டுப்பாட்டுக் கருவியின் பின் பகுதியினை மூடுதல் வேண்டும். உறுதியாக மூடப்படுவதற்கு ஏற்ப அதற்கென அமைக்கப்பட்டுள்ள இரு துளைகள் வழியாக மெல்லிய துண்டுக் கம்பியினை (thin wire) நுழைத்து முடுக்கி விடல் வேண்டும். வாக்குப்பதிவு முடிவு பெற்ற பின் கட்டுப்பாட்டுக் கருவியின் பின் பகுதி திறக்கப்பட்டு மின் சுவிட்சை இயங்கா நிலைக்கு (switch OFF the power) கொண்டு வரப்பட வேண்டுமென்பதாலும் வாக்குப்பதிவுக் கருவியின் இணைப்புத் துண்டிக்கப்பட வேண்டும் என்பதாலும் பின்புறப் பகுதி முத்திரையிடப்படல் கூடாது என்பதையும் நீங்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

# வாக்குப்பதிவு

- இரகசியமாக வாக்களிக்க வாக்குப்பதிவுக் கருவியை வாக்குப்பதிவு அடைப்புப் பகுதியில் வைக்க வேண்டும். வாக்களிக்க எவ்வித இடையூறும் இல்லாத வகையில் மேசைகளின் மீது வைக்கப்பட வேண்டும்.
- வாக்குப்பதிவு துவங்குவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாக எல்லா ஆயத்தப்பணிகளையும் செய்து முடித்து விட்டு சரியான நேரத்தில் வாக்குப்பதிவினைத் தொடங்கிவிட வேண்டும்.
- எக்காரணத்தைக் கொண்டும் வாக்குப்பதிவினை காலம் தாழ்த்தித் துவங்குவதோ, வாக்குப்பதிவினை உரிய நேரத்தில் முடிக்காமல் இருப்பதோ கூடாது.
- 'Total' என்ற பட்டனை அழுத்தி மொத்த வாக்குகள் பூஜ்யம் என உள்ளதை உறுதி செய்திட வேண்டும்.

# வாக்குப்பதிவு

**வாக்குப்பதிவு ரகசியங்கள் காத்தல் பற்றிய எச்சரிக்கையை விடுத்தல்**

- வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன் வாக்குச்சாவடிக்கு வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர்களைக் கொண்டு வாக்குப்பதிவு ரகசியங்கள் காத்தல் குறித்தான உறுதிமொழியினை எடுக்கச் செய்ய வேண்டும்.
- வாக்குப்பதிவு ரகசியத்தை மீறுபவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகள் குறித்தும் அவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள். உறுதிமொழி படிவத்தில் முகவர்களின் கையொப்பங்களை படிவத்தில் (இணைப்பு 5) பெற வேண்டும்.

**அழியாத மை குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

- அழியாத மை குப்பி சாய்ந்து மை கீழே கொட்டிவிடாமல் இருக்க, கொடுக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கிண்ணத்தில் மணலை நிரப்பி மைக்குப்பியின் முக்கால் பகுதி மணலில் புதைந்திருக்குமாறு நிறுத்தி வைக்க வேண்டும்.
- அழியாத மையிடுவதற்காக கொடுக்கப்பட்டிருக்கும் பிளாஸ்டிக் குச்சியின் மையிடும்பகுதி குப்பியினுள் செங்குத்தாக இருக்குமாறு நிறுத்தி வைக்கப்

# வாக்குப்பதிவு

**குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் –**

- வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பாக, குறியிடப்பட்ட **வாக்காளர் பட்டியல்களில் அஞ்சல் வாக்குகள் (Postal Ballot) வழங்கப்பட்டவர்கள்** குறித்த விவரம் தவிர வேறு குறியீடுகள் ஏதும் அதில் இல்லை என்பதை வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர்களுக்குக் காட்ட வேண்டும்.

**வாக்காளர் பதிவேடு (படிவம் 21)**

- **வாக்காளர் பதிவேட்டில் (படிவம் 21) முன்னதாக எந்தப் பதிவும் பதியப்படவில்லை** என்பதை வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் காட்ட வேண்டும்.

# வாக்குப்பதிவு

**வாக்குச்சாவடியினுள் வாக்காளர்கள் அனுமதிப்பதை முறைப்படுத்துதல்** –

- ஆண் மற்றும் பெண் வாக்காளர்களுக்குத் தனித்தனி வரிசை இருக்க வேண்டும். ஆண் வாக்காளர்களுக்கோ, பெண் வாக்காளர்களுக்கோ பல வரிசைகள் இருப்பதை அனுமதிக்கக்கூடாது.
- ஆண் வாக்காளர்களையும் பெண் வாக்காளர்களையும் மாற்றி மாற்றி ஒவ்வொரு வாக்காளராக வாக்குச் சாவடிக்குள் அனுப்ப காவலரிடம் கட்டளையிட வேண்டும்.
- மாற்றுத் திறனாளி வாக்காளரையும், கைக்குழந்தையுடன் இருக்கும் பெண் வாக்காளரையும் வரிசையில் நிற்கும் ஏனைய வாக்காளர்களைவிட முதலில் சென்று வாக்களிக்க அனுமதிக்கலாம்.

# புதிய வாக்குப்பதிவுக் கருவி

**புதிய வாக்குப்பதிவுக் கருவிகள் பயன்படுத்தப்படும் நேரங்களில் கடைபிடிக்கப்பட வேண்டிய முறைகள்**

- வாக்குப்பதிவு நடைபெறும் போது, தவிர்க்கமுடியாத கட்டாயமான சூழ்நிலைகளில் புதிய வாக்குப்பதிவுக் கருவியினை பயன்படுத்த வேண்டிய அவசியமேற்படின் படிவம் 12—ல் பகுதி 1—ல் உள்ள **கூடுதல் உறுதி மொழியினையும்** நீங்கள் வாசித்திடல் வேண்டும்.
- வாக்குப்பதிவு முடிவுறும்போது படிவம் 12 பகுதி 2—ல் உள்ள உறுதிமொழியினை மேற்சொன்ன முறைப்படி வாசித்திடல் வேண்டும்.
- மேற்படி **உறுதிமொழிக் கடிதத்தினை தனி உறையினுள் இட்டு** வாக்குப்பதிவு நிறைவுற்றதும் வாக்குப்பதிவு குறித்த கணக்கு தாள் முத்திரை கணக்கு ஆகியவற்றை ஒப்படைத்திடல் வேண்டும்.

# வாக்குப்பதிவு

**முறைகேடான நபர்களை அகற்றிடல்**

- வாக்குப்பதிவின் போது எந்த நபரேனும் தகாதவாறு நடந்து கொண்டால் அல்லது உங்களுடைய சட்டமுறையான கட்டளைகளுக்கு இணங்கி நடக்கத் தவறினால் உங்களுடைய ஆணையின் பேரில் காவல் அலுவலர் அல்லது உங்களால் அதிகாரமளிக்கப்பட்டவர்களால் சம்பந்தப்பட்ட நபர் வாக்குச்சாவடியிலிருந்து வெளியேற்றப்படலாம்.

**வாக்காளர்களை ஏற்றிச் செல்லும் பொருட்டு சட்டத்திற்கு முரணாக வாகனங்களை வாடகைக்கு அமர்த்திடல்**

- உங்களிடம் புகார் செய்யப்பட்டால் விதிகளை மீறுபவர் மீது விதிகளின்படி வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கையினை அவர்களே மேற்கொள்ளலாம் என்பது குறித்தும் மேலும் மேற்படி வேட்பாளருக்கு எதிராக உரிய நேரத்தில் தேர்தல் மனு தாக்கல் செய்வதற்கான ஓர் ஆதாரமாக இச்செய்தியை உங்களிடம் தாக்கல் செய்யப்படும் யாதொரு புகாரையும் அந்த வழக்குகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்வதற்கான வரம்புடைய உட்கோட்ட குற்றவியல் நீதிபதிக்கு அல்லது அத்தகு அதிகாரமுடைய வேறொரு குற்றவியல் நீதிபதிக்கு மேல்நடவடிக்கைக்கு அனுப்பி வைக்கலாம்.

# வாக்குப்பதிவு

**தேர்தல் அலுவலர்கள் அலுவல் கடமையில் தவறுதல்**

- தேர்தல் அலுவலர்கள் அலுவல் கடமையில் தவறுதல் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அல்லது வாக்குப்பதிவு அலுவலர் எவரேனும் தம் அலுவல் கடமையில் தவறிழைக்கும் வகையில் தகுந்த காரணமின்றி யாதேனும் குற்றமான செயல் புரிந்தால் அல்லது கடமை செய்திடத் தவறினால் பிடியாணையின்றி கைது செய்யப்படுவதற்குரிய குற்றத்தை புரிந்தவராவார். மேலும் அத்தகை புகார்கள் உறுதி செய்யப்படும் நேர்வில் அவர்களின் மீது கடுமையான நடவடிக்கை தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்படும்.

**மரணமடைந்த மற்றும் போலியான வாக்காளர் பற்றிய விவரங்கள்**

- மரணமடைந்த, காணாமற்போன மற்றும் போலியான வாக்காளர்கள் பற்றிய விவரங்கள் ஒன்றை வாக்குச்சாவடி முகவர்கள் தம்முடன் கொண்டு வர வாய்ப்புள்ளது. வேட்பாளர் அல்லது அவர்களின் முகவர்கள் அதைப் போன்ற விவரங்களை உங்களிடம் வழங்கலாம். மேற்படி விவரங்களில் கண்ட ஒருவர் பெயரில் பிறிதொருவர் வாக்களிக்க வரும் நிகழ்வில், நீங்கள் அவ்வாக்காளரது அடையாளத்தை கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். எனினும் இது ஒரு முறையான ஆட்சேபணை என்று கருதுவதற்கில்லை.

# அடையாளத்தை எதிர்த்தல்

**வாக்காளரின் அடையாளத்தை எதிர்த்தல்**

- வாக்காளர் பட்டியலில் ஒருவரது பெயர் இடம் பெற்றிருந்தாலே அவர் வாக்களிக்க உரிமையுள்ளவர் ஆவார். இருப்பினும் வாக்களிக்க வரும் நபரின் அடையாளம் குறித்து உங்களுக்கு சந்தேகம் எழுமாயினும், வாக்குச்சாவடிக்கு வந்திருக்கும் வேட்பாளர் / வாக்குச்சாவடி முகவர் யாரேனும் அந்தநபரின் அடையாளம் குறித்து எதிர்ப்புத் தெரிவித்தாலும் நீங்கள் அந்நபரிடம் சுருக்க விசாரணை மேற்கொள்ள வேண்டும்.
- வாக்காளர் ஒருவரின் அடையாளம் பற்றி வேட்பாளர் அல்லது அவரது தேர்தல் / வாக்குச்சாவடி முகவர் எதிர்ப்பு தெரிவித்தால், அவ்வாறு எதிர்ப்பு தெரிவிப்பவர் ரூ.10/– (ரூபாய் பத்து மட்டும்) கட்டணமாகச் செலுத்தி தனது எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டும்.
- பெறப்பட்ட கட்டணத் தொகைக்கு ரசீது (இணைப்பு 7) கொடுக்கப்பட வேண்டும். இதற்காகத் தக்க பற்றுச் சீட்டு புத்தகம் உங்களுக்குத் தரப்படும்.

# அடையாளத்தை எதிர்த்தல்

**வாக்காளரின் அடையாளத்தை எதிர்ப்பதற்கான கட்டணம்**

- அவர் அந்தத் தொகையை செலுத்தத் தவறினால் அந்த எதிர்ப்பினை முறையானதாகக் கருத வேண்டியதில்லை.
- பின்னர் எதிர்க்கப்படும் நபருக்கு ஆள் மாறாட்டத்திற்கான தண்டனை பற்றி நீங்கள் அவருக்கு எச்சரிக்க வேண்டும்.
- பின்னர் எதிர்க்கப்படும் வாக்குகளுக்கான பட்டியலில் (படிவம் 13) உரிய பதிவுகளை மேற்கொண்டு அதில் அவரது கையொப்பம் / ரேகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு அவர் கையொப்பம் / ரேகை இட மறுத்தால் அவரை வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது.

# சுருக்க விசாரணை

- எதிர்க்கப்படுகின்ற நபர் குறிப்பிட்ட வாக்காளர் அல்ல என்பதை உறுதிபடுத்தும் சான்று / ஆவணங்களைக் காட்டுமாறு எதிர்ப்பாளரை கேட்க வேண்டும்.
- எதிர்ப்பாளர் தனது எதிர்ப்புக்கு ஆதரவாகச் சான்று / ஆவணங்கள் காட்டத் தவறினால் அந்த எதிர்ப்பைத் தள்ளுபடி செய்து எதிர்க்கப்பட்ட நபரை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.
- எதிர்ப்பாளர் தனது எதிர்ப்புக்கு ஆதரவாகச் சான்று / ஆவணங்கள் காட்டுவாரேயானால், எதிர்க்கப்படுகின்ற நபரை அவர்தான் அந்த குறிப்பிட்ட வாக்காளர் என்பதை நிரூபிக்குமாறு கேட்க வேண்டும். அவ்வாறு அவர் சான்று / ஆவணங்கள் காட்டி, தனது அடையாளத்தை நிரூபிப்பாரேயானால் அவரை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.
- **விசாரணைகளின்போது கிராம நிர்வாக அலுவலர் அல்லது வாக்காளரின் அண்டை வீட்டார் அல்லது அங்குள்ள மற்றவர்களின் சாட்சியத்தைக் கேட்டறிய உங்களுக்கு உரிமை உண்டு.**

# சுருக்க விசாரணை

- எதிர்ப்பாளர் கூறிய புகார் நிரூபிக்கப்படவில்லையெனில் எதிர்ப்பாளர் செலுத்திய தொகையை பறிமுதல் செய்ய வேண்டும்.
- எதிர்ப்பு நிரூபிக்கப்பட்டுவிட்டால் உங்கள் வாக்குச்சாவடிக்கு அருகிலுள்ள காவல் நிலைய பொறுப்பு அலுவலருக்கு புகார் கடிதம் எழுதி உங்கள் வாக்குச்சாவடியின் பணியிலுள்ள காவலரிடம் அந்த நபரை ஒப்படைக்க வேண்டும்.
- காவல் நிலைய பொறுப்பு அலுவலருக்கு அனுப்பும் புகார் கடிதம்இதர படிவங்களுடன் தரப்படும்.

# கட்டணத்தைத் திரும்ப அளித்தல்

**செலுத்தப்பட்ட எதிர்ப்புக் கட்டணத்தைத் திரும்ப அளித்தல்**

- வேட்பாளர் அல்லது தேர்தல் / வாக்குச்சாவடி முகவரால் எதிர்க்கப்பட்ட / ஆட்சேபணை செய்யப்பட்ட நபர் உண்மையான வாக்காளர் அல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டால், விசாரணை முடிந்த பிறகு நீங்கள் உடனடியாக ஆட்சேபணை செய்தவருக்கு அவர் செலுத்திய எதிர்ப்புக் கட்டணம் ரூ.10–னை திருப்பி அளிக்க வேண்டும்.
- அதற்கு முன்னதாக படிவம் 13ல் கொடுக்கப்பட்டுள்ள மறுப்பிற்குட்பட்ட வாக்குச்சீட்டுகள் பட்டியலில் கலம் 9–ல் நீங்கள் அவரது கையொப்பத்தினைப் பெற வேண்டும்.
- ஆனால், எதிர்ப்பிற்கு ஆதரவாக தக்க சான்று / ஆவணங்கள் / ஆதாரங்கள் காட்டத் தவறினால் மேற்படி கட்டணத்தை திருப்பித் தரவேண்டியதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் எதிர்ப்புக் கட்டணத்தை பேரூராட்சி / நகராட்சி / மாநகராட்சிக்குச் சார்பாக பறிமுதல் செய்துவிடுங்கள்.

# கட்டணத்தைத் திரும்ப அளித்தல்

- இந்த கட்டணத்தை எதிர்ப்பவர்களுக்குத் திருப்பிக் கொடுக்காதீர்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில் படிவம் 13–ல் கலம் 9–ல் மேற்படித் தொகையைச் செலுத்தியவரது கையொப்பம் / ரேகையைப் பெறுவதற்குப் பதிலாக, அவற்றில் ‘பறிமுதல் செய்யப்பட்டது’ என்ற சொற்களை எழுதவும்.
- வாக்குப் பதிவு முடிந்த பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட தொகையை, மண்டல அலுவலரிடம் சேர்ப்பித்துப் படிவம் 13–ல் ஒப்புதல் பெற்றுக்கொள்ளுங்கள். **மேற்கண்ட பட்டியலையும் ரசீது புத்தகத்தையும் உறையிலிட்டு மூடி முத்திரையிட்டு தேர்தல் நடத்தும் அலுவலருக்கு** மண்டல அலுவலர் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

# வாக்காளர் பட்டியல்

**வாக்காளர் பட்டியலில் காணப்படும் அச்சுப்பிழை மற்றும் எழுத்துப்பிழைகளைத் தவிர்த்தல்**

- வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் விவரங்கள் தொடர்பான பதிவுகளில் ஏதேனும் அச்சுப்பிழை அல்லது எழுத்துப்பிழை இருந்தால் வாக்காளர் பட்டியலில் உள்ள இதர பதிவுகளின் அடிப்படையில் அந்த நபரின் அடையாளம் குறித்து நீங்கள் மனநிறைவுகொள்ளும் நிலையில் இப்பிழைகளை ஒதுக்கிவிடலாம்.

**வாக்காளரின் தகுதி குறித்து வினா எழுப்பாமை**

- வாக்காளர் ஒருவரின் அடையாளம் குறித்து மனநிறைவு கொள்ளும் வகையில் உங்களால் சரிபார்க்கப்பட்டபின் அவர் வாக்களிக்க உரிமை உடையவராவார். நீங்கள் வாக்காளரிடம் வாக்களிக்கத் தகுதியான 18 வயது நிரம்பியவரா அல்லது அவர் அந்தப்பிரிவில் குடியிருப்பவரா போன்ற வினாக்கள் எழுப்பக்கூடாது.

# அழியாத மையிடுதல்

- முதல் வாக்குப்பதிவு அலுவலரால் வாக்காளரின் அடையாளம் சரிபார்க்கப்பட்ட பின், இரண்டாம் வாக்குப்பதிவு அலுவலர் வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரலில் அழியாத மையிட வேண்டும்.
- இடப்படும் அழியாத மையை அழிக்கும் நோக்கத்தில் வாக்காளரின் இடது கை சுட்டு விரலில் எண்ணெய் அல்லது பசை போன்ற பொருட்கள் தடவப்பட்டுள்ளதாக தோன்றினால் ஒரு துணியின் உதவி கொண்டு விரலை நன்கு துடைத்து எண்ணெய் பசையை நீக்கிவிட்டு அழியாத மையிடவேண்டும்.
- வாக்காளர் வாக்களிக்க வாக்குப்பதிவுத் தடுப்பிற்குள் செல்லுமுன் மறுபடியும் அவரது இடது கை ஆட்காட்டி விரலை கட்டுப்பாட்டு அலகிற்குப் பொறுப்பான வாக்குப்பதிவு அலுவலர்கள் சரிபார்க்க வேண்டும். வாக்காளர், இடப்பட்ட அழியாத மையினை அழித்து விட்டிருந்தாலோ அல்லது மை சரியாகத் தெரியாமல் இருந்தாலோ மறுபடியும் அவரது இடது கைச் சுட்டு விரலில் அழியாத மையிட வேண்டும்.

# அழியாத மை மற்றும் வாக்குப்பதிவு

- வாக்காளர், அவருடைய இடது கை ஆட்காட்டி விரலை வாக்குப்பதிவு அலுவலர் பார்வையிட்டு அழியாத மையிட மறுத்தாலோ, ஏற்கனவே அவருடைய இடது கைச் சுட்டு விரலில் அழியாத மையிடப்பட்டதற்கான அடையாளம் காணப்பட்டாலோ, அல்லது அழியா மையிடப்பட்டவுடன் அதனை அழிக்க முயன்றாலோ அவ்வாக்காளரை வாக்குப்பதிவு செய்ய அனுமதிக்கக் கூடாது.
- வாக்காளரின் விரலில் அழியாத மையிட்ட பிறகே வாக்காளரின் கையொப்பம் / பெருவிரல் ரேகை பெறப்படுகிறது. இதனால் வாக்காளர் வாக்களித்து விட்டு வாக்குச்சாவடியை விட்டு செல்லுமுன் விரலில் வைக்கப்பட்ட அழியாத மை உலர்ந்து அடையாளம் ஏற்படுத்த போதிய கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

# வாக்காளர் பதிவேடு

**வாக்காளர் பதிவேடு**

- வாக்காளர் பதிவேட்டின் கலம் 1ல் தொடர் எண்களை 1–லிருந்து தொடங்கி வரிசையாக எழுதவேண்டும்.
- **ஒரு பக்கத்தில் 10 தொடர் எண்கள் வரை எழுதவேண்டும்.**
- வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பே தொடர் எண்களை சில பக்கங்கள் வரை எழுதி வைத்துக் கொள்ளலாம்.
- பதிவேட்டின் இரண்டாம் கலத்தில் குறியீட்டு வாக்காளர் பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி வாக்காளரின் தொடர் எண்ணை எழுத வேண்டும். உதாரணமாக வாக்குச்சாவடிக்கு வரும் முதலாம் வாக்காளரின் பெயர் குறியீட்டு வாக்காளர் பட்டியலில் தொடர் எண் 356ல் குறிப்பிடப்பட்டிருந்தால் வாக்காளர் பதிவேட்டின் முதல் கலத்தில் 1 என்றும் இரண்டாம் கலத்தில் 356 என்றும் இரண்டாம் வாக்குப்பதிவு அலுவலர் குறிப்பிட வேண்டும். அதேபோல் வாக்குச்சாவடிக்கு அடுத்ததாக வரும் வாக்காளரின் பெயர், வாக்காளர் பட்டியலில் தொடர் எண். 90 ல் இருப்பின் பதிவேட்டின் முதல் கலத்தில் 2 என்றும் இரண்டாம் கலத்தில் 90 என்றும் வாக்குப்பதிவு அலுவலர் எழுத வேண்டும்.

# வாக்காளரின் கையொப்பம்

**வாக்காளரின் கையொப்பம்**

- வாக்காளர் பதிவேட்டில் கையொப்பமிடும் வாக்காளர் அதில் தம்முடைய முழுப் பெயரையும், உப பெயர் ஏதாவது இருப்பின் அதையும் சேர்த்து எழுத வேண்டும்.
- **பதிவேட்டில் ஏதாவது ஒரு அடையாளத்தை / குறியை ஏற்படுத்திவிட்டு கையொப்பமிடப்பட்டு விட்டதாக கூறினால் அதை கையொப்பமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது.** இத்தகைய நேர்வில் அந்நபரின் பெருவிரல் ரேகையைப் பெறவேண்டும். பெருவிரல் ரேகையைத் தரவும் மறுத்தால் அவரை வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது.

**பார்வையற்ற / மாற்றுத்திறனாளி / தொழு நோயாளிகளின் கையொப்பம் / பெருவிரல் ரேகையினைப் பெறுதல்**

- அவ்வாறு பெறப்படும் கையொப்பம் / விரல் ரேகைகளுக்கு எதிரே அது துணையாளருடையது என்பதை குறிப்பிட வேண்டும்.

# துண்டுச் சீட்டு

**வாக்காளருக்கு துண்டுச் சீட்டு வழங்குதல்**

- வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரலில் அழியாத மை இடப்பட்டவுடன் வாக்காளர் பதிவேட்டில் வாக்காளரின் கையொப்பம் / பெருவிரல் ரேகையினை பெற்றபிறகு தொடர்புடைய **<u>வாக்குப்பதிவு அலுவலர்களால் படிவத்தில் வாக்காளர் துண்டுச்சீட்டைத் பூர்த்தி செய்து வழங்கப்பட வேண்டும்.</u>**

# வாக்குப்பதிவிற்கான நடைமுறைகள்

**வாக்குப்பதிவு மற்றும் வாக்குப்பதிவிற்கான நடைமுறைகள்**

வாக்காளருக்கு வாக்காளர் துண்டுச்சீட்டு வழங்கப்பட்டவுடன் அவர் **அத்துண்டுச் சீட்டுடன் கட்டுப்பாட்டுக் கருவிக்கு பொறுப்பான வாக்குப்பதிவு அலுவலரிடம் செல்வார்.** வாக்காளர் பதிவேடுகளில் பதியப்படும் பதிவுகளின் வரிசையிலேயே வாக்காளர்களை வாக்களிக்க அனுமதிக்க வேண்டியது மிக இன்றியமையாததாகும். எனவே வாக்காளர் துண்டுச்சீட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் தொடர் எண் அடிப்படையில் தான் வாக்காளர்களை வாக்கினைப் பதிவு செய்ய தொடர்புடைய வாக்குப்பதிவு அடைப்புப் பகுதிக்குள் (உறுப்பினர் / கவுன்சிலர் தேர்தல்) செல்ல அனுமதிக்க வேண்டும்.

எதிர்பாராத தவிர்க்க இயலாத காரணங்களினால் மேற்படி வரிசை முறை எந்த ஒரு வாக்காளருக்காவது பின்பற்ற இயலாத நிலையில் அவ்வாக்காளர் வாக்களித்த வரிசை எண்ணை வாக்காளர் பதிவேடுகளில் குறிப்புகள் கலத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதைப் போன்று வாக்களிக்கும் போது வரிசை எண்ணில் மாற்றம் ஏற்பட்ட பிற வாக்காளர்களுக்கும் உரிய பதிவுகள் மேற்கொள்ள வேண்டும்.

# வாக்குப்பதிவு செய்ய அனுமதித்தல்

**வாக்காளரை வாக்குப்பதிவு செய்ய அனுமதித்தல்**

- **வாக்காளர் கொண்டு வரும் வாக்காளர் துண்டுச்சீட்டை பெற்றுக் கொண்டு கட்டுப்பாட்டு கருவிக்கு பொறுப்பான வாக்குப்பதிவு அலுவலர் பெற்றுக் கொண்டு அவரை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.**
- வாக்குப்பதிவின் முடிவில் வாக்காளரிடமிருந்து பெறப்பட்ட அனைத்து துண்டுச்சீட்டுகளையும் தனியாக ஒரு உறையிலிட்டு பாகம் 27ல் விளக்கப்பட்டுள்ளது போல் முத்திரையிட்டு பாதுகாப்பாக வைக்க வேண்டும். இதற்கென தனியான உறைகள் தேர்தல் நடத்தும் அலுவலரால் வழங்கப்படும்.
- வாக்காளரிடமிருந்து வாக்காளர் துண்டுச்சீட்டு பெறப்பட்டவுடன் அவரது இடது கை ஆட்காட்டி விரலில் இடப்பட்ட அழியாத மை அடையாளத்தை தொடர்புடைய வாக்குப்பதிவு அலுவலர்கள் பார்வையிட வேண்டும். அழியாத மையின் அடையாளம் சரியாக தெரியாமல் இருந்தாலோ, மை அழிக்கப்பட்டிருந்தாலோ அதே இடத்தில் மையின் அடையாளம் தெளிவாக தெரியும் வகையில் மீண்டும் அழியாத மை இடப்பட வேண்டும். அதன் பிறகு வாக்காளரை வாக்குப்பதிவு செய்ய வாக்குப்பதிவு அடைப்புப் பகுதிக்குள் செல்ல அனுமதிக்க வேண்டும்.

# வாக்களிக்கும் முறை

- **மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர் கட்டுப்பாட்டுக் கருவியில்** உள்ள வாக்குப்பதிவுப் பொத்தானை (Ballot button) அழுத்த வேண்டும்.
- **கட்டுப்பாட்டுக் கருவியில்** உள்ள **சிகப்பு விளக்கு** ("Busy") ஒளிரும்.
- அடைப்புப் பகுதியில் உள்ள **வாக்குப்பதிவுக் கருவியில் பச்சை விளக்கு** ("Ready") ஒளிரும்.
- வாக்காளர் வாக்குப்பதிவுக் கருவியில் பெயருக்கும் சின்னத்திற்கும் எதிரேயுள்ள பொத்தானை அழுத்தும்போது அவ்வேட்பாளரின் பெயருக்கு நேர் எதிரே இருக்கும் **விளக்கு சிகப்பு நிறத்தில்** ஒளிரும்.
- உடனே வாக்குப்பதிவுக் கருவியில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் **"பச்சை விளக்கு" (**"Ready"**) அணைந்து விடும்.**

# வாக்களிக்கும் முறை

- அதே நேரத்தில் கட்டுப்பாட்டு கருவியிலிருந்து பீப் ஒலி கேட்கும்.
- சில வினாடிகளில் **வாக்குப்பதிவு கருவியில் சிவப்பு நிறத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த வேட்பாளர் விளக்கும் கட்டுப்பாட்டு கருவியில் சிவப்பு நிறத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த பிஸி விளக்கும் (**“Busy”**)** அணைந்துவிடும். பீப் ஒலியும் நின்றுவிடும்.
- இத்தகைய ஒலியுடன் கூடிய அடையாளங்கள் வாக்காளர் தம்முடைய வாக்கினைப் பதிவு செய்துவிட்டதைக் குறிக்கும். **உடனே வாக்காளர் வாக்குப்பதிவு மறைவுப் பகுதியில் இருந்து வெளியேறி** வாக்குச்சாவடியை விட்டுச் செல்ல அறிவுறுத்தலாம்.
- வாக்குப்பதிவு அடைப்புப் பகுதியில் ஒரு வாக்காளரை மட்டுமே வாக்குப்பதிவு செய்ய அனுமதிக்க வேண்டும்.

# பதிவான வாக்குகளின் எண்ணிக்கையை சரிபார்த்தல்

- குறிப்பிட்ட நேரம் வரை பதிவான வாக்குகளின் மொத்த எண்ணிக்கையை கணக்கிட கட்டுப்பாட்டு கருவியில் இருக்கும் மொத்தம் (total) பொத்தானை அழுத்த வேண்டும். உடனே கட்டுப்பாட்டுக் கருவியில் அமைந்துள்ள காட்சித் திரை (display panel) அதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த வாக்குகளின் எண்ணிக்கையைக் காட்டும்.
- **வாக்காளர் பதிவேட்டின்படி** வாக்களிக்க அனுமதிக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையும் **காட்சித் திரை (**display panel**)** காட்டும் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையும் ஒத்துள்ளதா என்பதை அவ்வப்போது சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு இரண்டு மணி நேர இடைவெளிகளில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையை சரிபார்த்து வாக்குச் சாவடி **தலைமை அலுவலர் நாட்குறிப்பேட்டில்** உரிய கலத்தில் குறித்துக் கொள்ள வேண்டும்.

# வாக்குப்பதிவு முடிவு

- பிஸி விளக்கு ("Busy") எரியாமல் இருக்கும் போது மட்டுமே மொத்தம் (Total) பட்டனை அழுத்த வேண்டும்.
- ஒவ்வொரு முறையும் இந்த 'Total' பட்டனை அழுத்தும்போதும் காட்சித்திரை (Display panel) பின்வருமாறு விவரங்களைக் காட்டும்.




எச்சரிக்கை: **வாக்குப்பதிவின்போது** 'Close' **பட்டனின் மூடியினைத் திறக்கக்கூடாது.**

# வாக்குச்சாவடித் தலைமை அலுவலர்

**வாக்குப்பதிவின் போது வாக்குச்சாவடித் தலைமை அலுவலர் வாக்குப்பதிவு மறைவுப் பகுதிகளுக்குள் செல்லுதல்**

- வாக்குப்பதிவுக் கருவிகள் சரியாக செயல்படவில்லை என்றோ,
- வாக்குப்பதிவு அடைப்புப் பகுதிகளில் அனுப்பப்பட்ட வாக்காளர் வாக்குப்பதிவுக் கருவிகளில் முறைகேடு செய்கின்றார் என்றோ,
- வாக்குப்பதிவு அடைப்புப் பகுதியில் தேவையில்லாமல் நீண்ட நேரம் வாக்காளர் இருக்கின்றார் என்றோ நீங்கள் சந்தேகம் கொள்வீர்களாயின் வாக்குப்பதிவு அடைப்புப் பகுதிக்குச் செல்ல வாக்குச்சாவடித் தலைமை அலுவலருக்கு உரிமை உண்டு.
- மேற்குறிப்பிட்டபடி வாக்குப்பதிவு அடைப்பு பகுதிக்குள் செல்லும்போது வாக்குச்சாவடி முகவர்களையும் அவர்கள் விரும்பினால் உடன்வர அனுமதிக்கலாம்.

# இரகசியம் காத்தல்

**வாக்காளர்கள் வாக்களிப்பின் இரகசியத்தை காத்தல்**

- வாக்குச்சாவடி தலைமை அலுவலரால் வாக்களிப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என வாக்காளருக்கு எச்சரிக்கை விடுத்தும் அதனைப் பின்பற்ற மறுத்தால் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அல்லது வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் கட்டளையின்படி வாக்குப்பதிவு அலுவலர் அத்தகைய வாக்காளரை வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது.
- அத்தகைய வாக்காளருக்கு வாக்களிக்க **வாக்காளர்கள் துண்டுச் சீட்டு (voters slip)** வழங்கப்பட்டிருப்பின் அதனை மீளப் பெற்று இரத்து செய்ய வேண்டும்.
- வாக்களிப்பு நடைமுறையை மீறியதற்காக வாக்காளர் வாக்களிக்க அனுமதிக்கப்படாமல் இருந்தால் வாக்காளர் பதிவேட்டில் இத்தகைய மீறலை பற்றி (படிவம் 21) வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. “வாக்களிப்பு நடைமுறை மீறப்பட்டது” என தொடர்புடைய பதிவேடு குறிப்புகள் காலத்தில் வாக்காளர் பெயர் பதிவுக்கு எதிரே குறிப்பிடப்பட வேண்டும். வாக்குச்சாவடித் தலைமை அலுவலர் இத்தகைய பதிவுகளுக்கு கீழே தனது முழு கையொப்பத்தை இட வேண்டும். இவ்வாறான நேர்வில் வாக்காளர் பதிவேட்டில் கலம் (1) ல் மேற்கண்ட வாக்காளரின் வரிசை எண்ணையோ அல்லது அவருக்கு அடுத்தபடியான வாக்காளரின் வரிசை எண்ணையோ மாற்ற வேண்டிய அவசியமில்லை.

# மாற்று திறனாளி வாக்காளர்கள் வாக்குப்பதிவு

**பார்வையற்ற / நலிவுற்ற / மாற்று திறனாளி வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்தல்**

- வாக்காளர் கண் பார்வையற்றவராகவோ / மாற்று திறனாளியாகவோ இருந்தால், அவரது சார்பில் அவர் விருப்பப்படி வாக்குப்பதிவு செய்வதற்காக 18 வயதுக்குக் குறையாத ஒருவரை அந்த வாக்காளர் தம்முடன் வாக்குப்பதிவு செய்யும் பகுதிக்குள் அழைத்துச் செல்லலாம்.
- உடன் வந்த அவர் ஒரு வாக்காளராக இருக்க வேண்டிய அவசியமில்லை.
- ஒரே நாளில் யாதொரு வாக்குச்சாவடியிலும் ஒருவருக்கு மேற்பட்ட வாக்காளர்களுக்கு உதவியாளராக செயல்படுவதற்கு எவரையும் அனுமதிக்கக் கூடாது.
- வாக்காளர் சார்பாக அவர் பதிவு செய்த வாக்கின் ரகசியத்தை பாதுகாப்பார் என்றும், அவர் வேறு எந்த வாக்குச்சாவடியிலும் வேறு எந்த வாக்காளருக்காகவும் உதவியாளராக செயலாற்றவில்லை என்றும் உறுதிமொழி (இணைப்பு 9) ஒன்றை குறிப்பிட்ட படிவத்தில் வாங்க வேண்டும். (அந்த உறுதிமொழியின் படிவம் பிற தேர்தல் சாதனங்களுடன் கொடுக்கப்பட்டிருக்கும்).

# மாற்று திறனாளி வாக்காளர்கள் வாக்குப்பதிவு

- இந்தப் படிவத்தை உறுதிமொழிகளுடன் அதற்கான உறையில் வைத்து தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சேர்ப்பிக்கும் வகையில் முறைப்படி ஒப்படைத்தல் வேண்டும்.
- ஒரு வாக்காளர் கல்வி அறிவில்லாதவர் என்பதால் அவர் சார்பில் வாக்குப்பதிவு செய்வதற்காக ஒரு உதவியாளரின் உதவி அவருக்கு வழங்க வேண்டும் என்பதில்லை.

# வாக்கினை பதிவு செய்ய விரும்பாத வாக்காளர்கள்

- ஒரு வாக்காளர், வாக்காளர் பட்டியலில் உள்ள அவரது வரிசை எண் முறைப்படி வாக்காளர் பதிவேட்டில் (படிவம் 21) பதிவு செய்யப்பட்ட பின் மற்றும் அவரது கையொப்பம் அல்லது இடது கை பெருவிரலின் பதிவினை மேற்படி பதிவேட்டில் இட்ட பின் தனது வாக்கினை பதிவு செய்ய விரும்பவில்லை எனத் தெரிவித்தால், வாக்கினைப் பதிவு செய்யுமாறு அவரை கட்டாயப்படுத்த வேண்டியதில்லை.
- வாக்காளர் பதிவேட்டில் மேற்படி வாக்காளர் சம்பந்தப்பட்ட பதிவுகளுக்கு எதிரில் குறிப்புகள் கலத்தில் “வாக்கினை பதிவு செய்ய விரும்பவில்லை” என்ற குறிப்பினை எழுதி அதன் கீழே உங்களது கையொப்பத்தினை இட்டு வைக்க வேண்டும்.

# வாக்கினை பதிவு செய்ய விரும்பாத வாக்காளர்கள்

- தேர்தல் விதியின் விதி 71–ல் உள்ளவாறு, மேற்படி வாக்காளரது கையொப்பம் அல்லது இடது கை பெருவிரல் பதிவினையும் மேற்படி குறிப்பின் எதிரில் பெறல் வேண்டும்.
- இருப்பினும், வாக்காளர்கள் பதிவேட்டில் (Register of voters) கலம் 1–ல் உள்ள வரிசை எண்களை மாற்ற வேண்டிய அவசியமில்லை.

# அஞ்சல் வாக்குச்சீட்டுகள்

**தேர்தல் பணியில் உள்ளவர்கள் அஞ்சல் வாக்குச்சீட்டுகள் மூலம் வாக்களித்தல்**

- தேர்தல் பணிக்கென நியமிக்கப்படுவோர் அஞ்சல் வாக்குச்சீட்டுக்கள் மூலம் வாக்களித்தல் குறித்து 2006 ஆம் ஆண்டின் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் விதிகளின் விதி எண்.50 ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- தேர்தல் பணிக்கென நியமிக்கப்படுவோர், படிவம் 15ல் அஞ்சல் வாக்குச்சீட்டுக் கோரி விண்ணப்பிக்க வேண்டும். படிவம் 16ல் தேர்தல் பணிச் சான்றுடன் அஞ்சல் வாக்குச் சீட்டினை தேர்தல் நடத்தும் அலுவலர் அனுப்பி வைப்பார்.

# அஞ்சல் வாக்குச்சீட்டுகள்

- மேற்படி நபருக்கு அஞ்சல் வாக்குச்சீட்டினை வழங்கும் போது தொடர்புடைய வாக்குச்சீட்டின் பின்புறத்திலும் அதனுடைய சரிநேர்படியிலும் **(counterfoil)** "**EDC**" என்று தேர்தல் நடத்தும் அலுவலர் குறியீடு செய்து வைப்பார். மேற்படி நபர் வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடிக்கு சம்பந்தப்பட்ட குறியீட்டு வாக்காளர் பட்டியலிலும் மேற்படி நபர் குறித்தான பதிவுகளை அடிக்கோடிட்டு அதன் எதிரே "**EDC**" என்று தேர்தல் நடத்தும் அலுவலர் எழுதி வைத்திடுவார்.
- வாக்களிக்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டுகள் படிவம் 17ல் உள்ள உறுதிமொழியுடன் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வாக்கு எண்ணுகை நாளன்று காலை 8.00 மணிக்கு முன்னதாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

# ஆய்வுக்குரிய வாக்குகள்

**ஆய்வுக்குரிய வாக்குகள்**

- ஒரு வாக்காளரின் வாக்கை ஏற்கனவே வேறு ஒருவர் வாக்களித்துவிட்டு சென்றிருப்பார். இத்தகைய நேர்வுகளில் அந்த வாக்காளரை விசாரணை செய்து அவர்தான் உண்மையில் வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளர் எனத் திருப்தி ஏற்பட்டால் அவரை **வாக்குப்பதிவு இயந்திரத்தின் மூலம் அல்லாமல் ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டின் மூலம் வாக்களிக்க** அனுமதிக்க வேண்டும்.
- ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகளாக பயன்படுத்துவதற்கென ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 10 அல்லது 20 வாக்குச்சீட்டுகள் தேர்தல் நடத்தும் அலுவலரால் வழங்கப்படும்.

# ஆய்வுக்குரிய வாக்குகள்

- இத்தகைய **வாக்குச்சீட்டுக்களின் பின்புறம் ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டு என்று எழுதி முழுக் கையொப்பத்தை இட்ட** பிறகு வாக்காளருக்கு வழங்க வேண்டும்.
- மொத்த ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகள், பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுகள், பயன்படுத்தப்படாமல் திருப்பப்படும் வாக்குச்சீட்டுகள் இவற்றின் கணக்கினை படிவம் **23** உடன் பாகம் **1**–ல் இனம் **8**–ல் குறிக்க வேண்டும்.
- பயன்படுத்தப்பட்ட ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுக்களின் கணக்கினை படிவம் **22**–ல் தனித்தனியே பராமரிக்க வேண்டும்.

# ஆய்வுக்குரிய வாக்குகள்

**ஆய்வுக்குரிய வாக்கினை பதிவு செய்தல்**

- வாக்குப்பெட்டிகளைப் பயன்படுத்தி வாக்கினைப் பதிவு செய்யும் போது பயன்படுத்தப்படும் **அம்புக்குறி ரப்பர் முத்திரை** இதர தேர்தல் சாதனங்களுடன் வழங்கப்படும்.
- ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகளை வாக்காளருக்கு வழங்கும் போது அம்புக் குறி ரப்பர் முத்திரையும் வழங்கப்பட வேண்டும்.
- வாக்காளர் தாம் வாக்களிக்க விரும்பும் வாக்காளருக்குரிய **சின்னத்தின் மீது அல்லது அதன் அருகே அம்புக் குறி முத்திரையிட்டு** மடித்து உங்களிடம் கொடுத்து விடுவார்.
- இவ்வாறு அளிக்கப்படும் **அனைத்து ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகளையும் படிவம் 22–ல் உள்ள பட்டியலையும் வாக்குப்பதிவின் முடிவில் அதற்கான தனி உறையிலிட்டு மூடி முத்திரையிட வேண்டும்.**
- இவ்வாறு ஆய்வுக்குரிய வாக்கினை அளிக்கும் வாக்காளர் பார்வையற்றவராகவோ, உடல் ஊனமுற்றவராகவோ இருந்தால் ஒரு துணையாளரை உடன் வர அனுமதிக்கலாம்.

# கலகம், வன்முறை அல்லது இயற்கை சீற்றம்

**கலகம், வன்முறை அல்லது இயற்கை சீற்றம் போன்ற சம்பவங்களால் வாக்குப்பதிவை ஒத்தி வைத்தல் / வாக்குப்பதிவு கருவி(களை)யை சேதப்படுத்துதல் / கருவி செயலிழத்தல் / சட்டத்திற்கு புறம்பாக எடுத்துச் செல்லுதல் முதலான காரணங்களால் வாக்குப்பதிவை நிறுத்தி வைத்தல்**

**கலகம் போன்ற சம்பவங்களால் வாக்குப்பதிவை ஒத்தி வைத்தல்**

- விதி 54(1)–ன் கீழ் நீங்கள் வெள்ளம், புயல் அல்லது இது போன்ற இயற்கை சீற்றங்களால் அல்லது கலவரம் அல்லது வெளிப்படையான வன்செயலால் அல்லது வாக்குப்பதிவு கருவி மற்றும் வாக்காளர் பட்டியல் வரப் பெறாமையால் அல்லது வாக்குப்பதிவு அலுவலர் குழு வரப்பெறாமையால் அல்லது வேறு ஏதாவது போதுமான காரணங்களினால் வாக்குப்பதிவு நடைபெறுவது இடையூறோ அல்லது தடையோ ஏற்பட்டால் வாக்குப்பதிவினை ஒத்தி வைக்கலாம்.

# கலகம், வன்முறை அல்லது இயற்கை சீற்றம்

கலகம் ஏற்பட்டால் அல்லது வெளிப்படையான வன்செயலுக்கு முயற்சி நடந்தால் அதை அடக்க காவலரை பயன்படுத்த வேண்டும். ஆயினும் அதனை அடக்க இயலவில்லையென்றாலும் வாக்குப்பதிவினைத் தொடர்ந்து நடத்த முடியவில்லையென்றாலும் வாக்குப்பதிவினை ஒத்தி வைக்க வேண்டும். சிறு தூறலோ அல்லது மழை பெய்தாலோ பலத்த காற்றோ வாக்குப்பதிவினை ஒத்தி வைக்கப் போதிய காரணம் ஆகாது. வாக்குப்பதிவை ஒத்தி வைத்தலை மிகவும் அரிதாக வாக்குப்பதிவை நடத்த இயலாத நேர்வில் மட்டுமே செய்ய வேண்டும்.

வாக்குப்பதிவை ஒத்தி வைக்கும் ஒவ்வொரு நேர்விலும் முழு விவரத்தை உடனடியாக தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அறிவிக்க வேண்டும். இதில் காலதாமதம் செய்யக்கூடாது. மேலும் மேற்கண்ட நிகழ்வுகளை தலைமை அலுவலரின் நாட்குறிப்பில் தவறாமல் குறிக்க வேண்டும். வாக்குப்பதிவை ஒத்தி வைத்த நேரத்தை சரியாக குறிப்பிட வேண்டும். மேலும் வாக்குப்பதிவை ஒத்தி வைத்ததையும், வாக்குப்பதிவு அடுத்தப்படியாக அறிவிக்கப்படும் ஒரு நாளில் நடைபெறும் என்பதையும் வாக்குச்சாவடிக்கு வந்திருக்கும் அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும்.

# கலகம், வன்முறை அல்லது இயற்கை சீற்றம்

இயல்பான முறையில் வாக்குப்பதிவு முடிவடைந்ததை போலவே இந்நேர்விலும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வாக்குப்பதிவு இயந்திரத்தின் இரண்டு அலகுகளையும் மற்றும் தேர்தல் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் வாக்குச்சாவடி முகவர்கள் முன்னிலையில் அரக்கு முத்திரையிட்டு காப்புறுதி செய்ய வேண்டும். மேற்கண்ட தேர்தல் ஆவணங்கள் அனைத்தையும் முறைப்படி தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

# ஒத்தி வைக்கப்பட்ட தேர்தலை முடித்தல்

- வாக்குப்பதிவை ஒத்தி வைத்த நேர்வில் நிர்ணயிக்கும் நாளில் மற்றும் நேரத்தில் வாக்குப்பதிவு ஏற்கனவே தடைப்பட்டு நடைபெறாத நேரத்திற்கு மட்டுமே நடத்தப் பெறவேண்டும் எனவும் அல்லது வாக்குப்பதிவு முழு அளவில் முழு நேரத்திற்கும் நடத்தப் பெறவேண்டும் எனவும் ஆணை பிறப்பிக்கப்படலாம்.
- வாக்குப்பதிவு தடைப்பட்ட நேரத்திற்கு மட்டுமே நடத்தப்படும் நேர்வில் வாக்குப்பதிவு ஒத்தி வைக்கப்படும் போது விட்ட இடத்திலிருந்து வாக்குப்பதிவு மீண்டும் தொடங்கும். அதாவது வாக்குப்பதிவு ஒத்தி வைக்கப்படுவதற்கு முன்னர் வாக்களிக்காத வாக்காளர்கள் மட்டுமே ஒத்தி வைக்கப்பட்ட வாக்குப்பதிவில் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர். இதற்காக முன்னர் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலின் குறியீட்டுப்படி, வாக்காளர் பதிவேடு (படிவம் 21) மற்றும் ஏனைய ஆவணங்களும் அளிக்கப்படும். மேலும் புதிய வாக்குப்பதிவு இயந்திரமும் வழங்கப்படும்.

# ஒத்தி வைக்கப்பட்ட தேர்தலை முடித்தல்

- இவ்வாறான வாக்குப்பதிவு மீண்டும் தொடங்குவதற்கு முன்னர் வாக்காளர் பட்டியலின் குறியீட்டுப்படி, வாக்காளர் பதிவேடு (படிவம் 21) மற்றும் இதர ஆவணங்களடங்கிய முத்திரையிடப்பட்ட உறைகள் அவ்வாக்குச்சாவடியில் வந்திருக்கும் வேட்பாளர்கள் அல்லது அவர்களின் முகவர்கள் முன்னிலையில் திறக்கப்பட வேண்டும். மேற்கண்ட வாக்காளர் பட்டியலின் குறியீட்டுப்படி, வாக்காளர் பதிவேடு (படிவம் 21) மட்டுமே மீண்டும் இவ்வாக்குப்பதிவில் பயன்படுத்தப்பட வேண்டும்.
- ஒத்தி வைக்கப்பட்ட வாக்குப்பதிவை முழு நேரத்திற்கும் நடத்தப்படும் நேர்வில் இதை ஒரு புதிய வாக்குப்பதிவை போன்று இயல்பான முறைப்படி நடத்தப்பட வேண்டும்.

# வாக்குப்பதிவுக் கருவி(கள்) செயலிழத்தல்

**வாக்குப்பதிவுக் கருவி(கள்) செயலிழத்தல் அல்லது சட்டத்திற்கு புறம்பாக எடுத்துச் செல்லுதல் போன்ற காரணங்களால் வாக்குப்பதிவை நிறுத்தி வைத்தல்**

- வாக்குப்பதிவு இயந்திரத்தை சட்டத்திற்குப் புறம்பாக எவரேனும் எடுத்துச் சென்றாலோ அல்லது எதிர்பாராத விதமாகவோ அல்லது வேண்டுமென்றே அழிக்கப்பட்டாலோ அல்லது தொலைந்து போனாலோ அல்லது சேதமடைந்தாலோ அல்லது உடைக்கப்பட்டிருந்தாலோ அல்லது வாக்குப்பதிவு முடிவினை தெரிந்துக் கொள்ள அல்லது உறுதிப்படுத்த இயலாத நிலையில் வாக்குப்பதிவை பாதிக்கும் அல்லது சீர்குலைக்கும் வகையில் நடைமுறையில் பிழை அல்லது முறைகேடு ஏற்பட்டாலோ அல்லது வாக்குப்பதிவுக் கருவியில் இயந்திர கோளாறு ஏற்பட்டாலோ நீங்கள் அதைப் பற்றிய **முழு விவரங்களையும் தேர்தல் நடத்தும் அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும். இதில் காலதாமதம் செய்யக் கூடாது. இது சம்பந்தமான உரிய குறிப்புகளையும் தலைமை அலுவலரின் நாட்குறிப்பில் தவறாமல் குறிக்க வேண்டும்.**

# வாக்குப்பதிவுக் கருவி(கள்) செயலிழத்தல்

- மேற்கண்ட வாக்குப்பதிவு செல்லாது என அல்லது தொடர்ந்து நடத்தி முடிவுக்கு கொண்டு வர உத்திரவு பிறப்பிக்கப்படலாம்.
- மேற்கண்டவாறு வாக்குப்பதிவினை செல்லாது என உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நேர்வில் இயல்பான முறையில் வாக்குப்பதிவு முடிந்தாற்போலவே வாக்குப்பதிவினை முடித்து தேர்தல் ஆவணங்கள் அனைத்தையும் முறைப்படி தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வாக்குச்சாவடிக்கு வந்திருக்கும் அனைவருக்கும் நடைபெற்ற வாக்குப்பதிவு செல்லாது என ஆணை பிறப்பிக்கப்பட்டதும் புதிதாக வாக்குப்பதிவு நடத்த ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளில் அத்தகைய வாக்குப்பதிவு நடைபெறும் எனவும் தெரிவிக்க வேண்டும்.
- அவ்வாறான புதிதாக வாக்குப்பதிவு நடத்தப்படும் நேர்வில் அத்தகைய வாக்குப்பதிவு ஏற்கனவே நடைபெற்ற (original) வாக்குப்பதிவு போலவே நடத்தப்பட வேண்டும். ஆகவே இவ்வாறான வாக்குச்சாவடியில் வாக்களிக்கும் உரிமையுள்ள அனைத்து வாக்காளரையும் புதிய வாக்குப்பதிவின் போது வாக்களிக்க உரிமையுள்ளவர்கள் ஆவார்கள். இத்தகைய நேர்வின் மூலம் வாக்குப்பதிவின் போது ஏற்கனவே வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரலில் அழியாத மை இடப்பட்டிருக்கும் என்பதால் புதிய வாக்குப்பதிவின் போது இந்த அழியாத மையினை வாக்காளரின் இடது கை நடு விரலில் இட வேண்டும்.

# வாக்குப்பதிவு முடிவு

**வாக்குப்பதிவு முடிவடையும் நேரத்தில் வந்திருக்கும் வாக்காளர்கள் வாக்களித்தல்**

- வாக்களிப்பு முடிவு நேரத்திற்குள் வாக்குச்சாவடியில் காத்திருக்கும் அனைத்து வாக்காளர்களையும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.
- வாக்குப்பதிவு நேரம் முடிந்த பிறகு வெளியிலிருந்து எவரும் வந்து அவர்களுடன் கலந்துக் கொள்ளாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள காவலர் அல்லது பிற பணியாளர்களைப் பணிக்க வேண்டும்.
- வரிசையிலுள்ள ஒவ்வொரு வாக்காளருக்கும் நீங்கள் முழுக் கையொப்பமிட்ட சீட்டுக்களை தொடர் எண் ஒன்று முதல் ஆரம்பித்து கடைசி வாக்காளர் வரை வழங்க வேண்டும். இந்த சீட்டுக்கள் வழங்குவதை வரிசையின் கடைசியில் நிற்கும் வாக்காளரிடம் தொடங்கி முதலில் நிற்கும் வாக்காளரிடம் முடிக்க வேண்டும்.

# வாக்குப்பதிவினை முடித்தல்

- வாக்குப்பதிவு **முடிவுறும் நேரத்தில்** வந்திருக்கும் வாக்காளர்கள், **வாக்குப்பதிவு முடிவடையும் நேரத்திற்குப் பின்பும்** வாக்களித்து முடித்தவுடன் வாக்குப்பதிவு முடிவடைந்தது என்பதை முறைப்படி அறிவிக்க வேண்டும்.
- இதன் பிறகு எந்த சூழலிலும் எவரையும் வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது.
- கடைசி வாக்காளர் வாக்களித்தவுடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் நிறுத்தப்பட்டு வாக்குப்பதிவு முடிக்கப்பட வேண்டும்.
- கருப்பு நிற ரப்பர் மூடியை எளிதாக அகற்றி **குலோஸ் பொத்தானை அழுத்தி வாக்குப்பதிவினை முடிக்க வேண்டும்.**
- கட்டுப்பாட்டுக் கருவியின் பின்பகுதியில் அறையினை (compartment) திறந்து கட்டுப்பாட்டு கருவியிலிருந்து வாக்குப்பதிவுக் கருவிகளை துண்டித்துவிட்டு **கட்டுப்பாட்டுக் கருவியின் பின் பக்கத்திலுள்ள மின்சக்தி பொத்தானை இயங்கா நிலைக்குக் (OFF) கொண்டு** வர வேண்டும்.


# வாக்குப்பதிவினை முடித்தல் ...

- கடைசி வாக்காளர் வாக்களித்தப் பின்பு **தவறுதலாக வாக்குப்பதிவு பட்டன் (Ballot Button) அழுத்தப்பட்டாலோ**,
- **வாக்குப்பதிவு பொத்தான் கடைசி வாக்காளர் வாக்களிக்க தயார் நிலையில் வைக்கப்பட்ட பின்பு அவர் வாக்களிக்க மறுத்தாலோ** கட்டுப்பாட்டு அலகின் பிஸி விளக்கு (Busy lamp) ஒளிரும்.

- இந்த விளக்கு ஒளிராமலிருக்க கட்டுப்பாட்டுக் கருவியின் **பின்புறத் தடுப்பிலுள்ள மின்சக்தி பொத்தான் (power switch) நிறுத்தப்பட்டு கட்டுப்பாட்டுக் கருவி மற்றும் வாக்குப்பதிவுக் கருவியின் இணைப்புகளைத் துண்டிக்க வேண்டும்**.

# வாக்குப்பதிவினை முடித்தல் ...

- கடைசியாக குளோஸ் (close) பொத்தான் அழுத்தப்பட்டவுடன் காட்சித்திரை கீழ்க்காணும் விவரங்களை ஒன்றன்பின் ஒன்றாக காண்பிக்கும்.




- காட்சித் திரையில் தெரியும் பதிவான மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை, படிவம் 23–ல் குறிக்கப்பட வேண்டும். அதன்பின் கருப்பு நிற ரப்பர் மூடியினை மீண்டும் பொருத்திவிடவும்.
- வாக்குப்பதிவு இயந்திரங்களின் power switch பொத்தானை OFF நிலைக்கு கொண்டு வந்து பின் பகுதியினை மூடிவிட வேண்டும்.

# பதிவான வாக்குகள் குறித்த கணக்கினைத் தயார் செய்தல்

**பதிவான வாக்குகள் குறித்த கணக்கினைத் தயார் செய்தல்**

- வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவாகியுள்ள மொத்த வாக்குகளின் எண்ணிக்கை வாக்காளர் பதிவேடுகளின் (படிவம்–21) கலம் 1–ல் பதிவு செய்துள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையிலிருந்து வாக்களிக்க விரும்பாதவர்களின் எண்ணிக்கை (பதிவேட்டின் குறிப்புகள் கலத்தில் உள்ளபடி) மற்றும் வாக்களிப்பு இரகசியத்தை மீறியமைக்காக தங்களால் வாக்களிக்க அனுமதிக்கப்படாதவர்களின் எண்ணிக்கை (பதிவேட்டின் குறிப்புகள் கலத்தில் உள்ளவாறு) ஆகியவற்றை கழித்த பின்னர் வரும் எண்ணிக்கைக்கு சமமாக இருத்தல் வேண்டும்.
- படிவம் 23–ல் தயார் செய்யப்பட்ட பதிவான வாக்குகளின் கணக்குகளை **உறுப்பினர்/கவுன்சிலர் தேர்தலுக்கான தனி உறையில்** வைத்திருத்தல் வேண்டும். மேற்படி உறையின் மேல் "பதிவான வாக்குகள் கணக்கு" ("Accounts of Votes Recorded") என எழுதி வைத்திடல் வேண்டும்.

# சான்றொப்பமிடப்பட்ட பிரதி

**பதிவான வாக்குகள் குறித்தான கணக்கின் சான்றொப்பமிடப்பட்ட பிரதியினை வாக்குச்சாவடி முகவர்களுக்கு வழங்குதல்**

- வாக்குப்பதிவு முடிவுற்ற பின் தங்களால் படிவம் 23–ல் தயாரிக்கப்படும் பதிவான வாக்குகள் குறித்த கணக்கின் சான்றொப்பமிடப்பட்ட ஒரு பிரதியினை உரிய ஏற்பளிப்பினைப் பெற்றுக் கொண்டு வாக்குச்சாவடி முகவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.
- வாக்குச்சாவடியில் உள்ள வாக்குச்சாவடி முகவர்கள் அனைவருக்கும் மேற்படி கணக்கின் பிரதி ஒன்று வழங்கப்படல் வேண்டும்.
- படிவம் 23–ல் அச்சிடப்பட்ட பிரதிகள் தேவையான அளவிற்கு வழங்கப்படும். போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கும் கூடுதலாக ஒன்று அல்லது இரண்டு பிரதிகள் வழங்கப்படும்.

# வாக்குப்பதிவு முடிவு

**வாக்குப்பதிவு முடிவின் போது அளிக்கப்பட வேண்டிய சான்று**

- மேற்குறிப்பிட்டவாறு விதி 75–ன்படியான வாக்குப்பதிவுக் கணக்கினை முகவர்களுக்கு வழங்குதல் குறித்தான் பணிகள் / தேவைகள் உங்களால் பூர்த்தி செய்யப்பட்டதை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு அதற்கான சான்று படிவம் 12 பகுதி II ல் வாக்குப்பதிவு முடிவுற்ற பின்னர் தங்களால் தயாரிக்கப்பட்டு முடிக்கப் பெறல் வேண்டும்.

**வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்குப்பதிவு இயந்திரங்களை மூடி முத்திரையிடல்**

- வாக்குப்பதிவு கருவி(கள்) மற்றும் கட்டுப்பாட்டு கருவி இரண்டையும் இணைக்கும் இணைப்புகளை துண்டிக்க வேண்டும்.
- கட்டுப்பாட்டு அலகின் மின்சக்தி இயக்கியை இயங்கா நிலைக்கு (OFF) கொண்டு வரவேண்டும்.
- வாக்குப்பதிவுக் கருவி மற்றும் கட்டுப்பாட்டுக் கருவி ஆகியவைகள் அவைகளுக்குரிய பெட்டிகளில் (carrying cases) வைக்கப்பட வேண்டும்.

- **கட்டுப்பாட்டுக் கருவி** மற்றும் வாக்குப்பதிவுக் கருவி(கள்) ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கான தனித்தனி பெட்டிகளின் இரு பக்கங்களில் அமைக்கப்பட்டுள்ள இரு துளைகள் வழியாக நூலினை நுழைத்து முத்திரையிடல் வேண்டும்.
- நூலுடன் தேர்தல் வாக்குச்சாவடி மற்றும் கருவிகளின் விவரங்கள் அடங்கிய முகவரி அட்டையின் மீது வாக்குச்சாவடித் தலைமை அலுவலரது நூல் முத்திரையிடப்படல் வேண்டும். (thread seal).

வாக்குப்பதிவுக் கருவியின் மீதுள்ள முகவரி அட்டையில் இடம் பெற வேண்டிய விவரங்கள் இருத்தல் வேண்டும். வாக்குச்சாவடியில் உள்ள வேட்பாளர்கள் அல்லது அவர்களின் வாக்குப்பதிவு முகவர்களில் விருப்பமுள்ளவர்கள் தங்களது முத்திரையினை அதில் இட அனுமதிக்கலாம்.

# தேர்தல் ஆவணங்களை முத்திரையிடல்

**கட்டுப்பாட்டுக் கருவி** மற்றும் வாக்குப்பதிவுக் கருவி(கள்) அடங்கியுள்ள பெட்டிகளின் மீது முத்திரையிட்டுள்ள தேர்தல் வாக்குச்சாவடி முகவர்களின் பெயர்களை வாக்குப்பதிவு முடிவுறும் போது மேற்கொள்ளப்படும் உறுதிமொழியில் (படிவம் 12ல்) நீங்கள் குறித்து வைத்திடல் வேண்டும்.

**தேர்தல் ஆவணங்களை முத்திரையிடல்**

1. **தேர்தல் ஆவணங்களை சிப்பங்களில் இட்டு முத்திரையிடல்**

- பதிவான வாக்குகள் கணக்கு, தாள் முத்திரைக் கணக்கு (படிவம் 23), வாக்குப்பதிவு துவக்கத்திற்கு முன்பு, வாக்குப்பதிவின் போது மற்றும் முடிவின்போதும் மேற்கொள்ளப்படும் வாக்குச்சாவடி தலைமை அலுவலரது உறுதிமொழிகள் மற்றும் **வாக்குச்சாவடித் தலைமை அலுவலரது குறிப்பேடு (வாக்குச்சாவடித் தலைமை அலுவலரின் தேர்தல் விவரக் குறிப்பேடு)** ஆகியவற்றைத் தவிர பிற ஆவணங்கள் பத்தி 3ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு நான்கு சிப்பங்களில் இடப்பட்டு தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பப்பட வேண்டும்.

# வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் ஆவணம்

**வாக்குப்பதிவு இயந்திரத்துடன் தனித்தனி உரிய உறையிலிடப்பட்டு சேகரிப்பு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியவை**

- பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் கணக்கு மற்றும் தாள் முத்திரைக் கணக்கு (படிவம் **23),**
- **நாட்குறிப்பேடு** மற்றும்
- வாக்குப்பதிவு தலைமை அலுவலரது உறுதிமொழிக் கடிதம்

**உறைகள்**

- ஒவ்வொரு உறையின் மீதும் ஆவணங்கள் பற்றிய விவரங்கள் குறித்தான தலைப்பு அச்சிடப்பட்டிருக்கும்.
- தலைப்பு அச்சிடப்பட்ட உறைகள் கிடைக்கப் பெறவில்லை எனில் தலைப்பினை எழுதி பயன்படுத்த வேண்டும்.

# வேட்பாளர் / தேர்தல் முகவர் / வாக்குச்சாவடி முகவர் முத்திரை

**வேட்பாளர் அல்லது அவரது தேர்தல் முகவர் அல்லது அவரது வாக்குச்சாவடி முகவரை கீழ்க்காணும் ஆவணங்கள் அடங்கிய உறைகளின் மேல் தனது முத்திரையினை இட அனுமதிக்கலாம்**

1. குறியீடு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல்.
2. வாக்காளர் பதிவேடு
3. வாக்காளர் துண்டுச் சீட்டுக்கள்
4. பயன்படுத்தப்பட்ட ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுக்கள் மற்றும் பட்டியல் (படிவம் 22)
5. பயன்படுத்தப்படாத ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகள்
6. மறுதலிக்கப்பட்ட வாக்குகள் குறித்த பட்டியல்
7. தேர்தல் நடத்தும் அலுவலரால் அறிவுறுத்தப்பட்டு தனி உறையில் வைத்து முத்திரையிடப்படும் பிற ஆவணங்கள் அடங்கிய உறைகள்

# முதலாவது சிப்பம் (சட்டமுறையான உறை Statutory covers).

1. வாக்காளர் பட்டியலின் குறியீட்டுப் படி (Marked copy of the electoral roll) அடங்கிய முத்திரையிடப்பட்ட உறை.
2. வாக்காளர் பதிவேடு (Register of electors) அடங்கிய முத்திரையிடப்பட்ட உறை
3. வாக்காளர் துண்டுச்சீட்டு (voters slip) அடங்கிய முத்திரையிடப்பட்ட உறை
4. பயன்படுத்தப்படாத ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய முத்திரையிடப்பட்ட உறை
5. பயன்படுத்தப்பட்ட ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய முத்திரையிடப்பட்ட உறை மற்றும் பட்டியல் (படிவம் 22)

# முதலாவது சிப்பம் (சட்டமுறையான உறை Statutory covers)…

- இந்த உறைகள் தனித்தனியாக தயார் செய்யப்பட வேண்டும்.
- சிப்பத்தில் போடப்படும் உறைகள் ஒவ்வொன்றின் மீதும் அவ்வுறையில் அடங்கியுள்ள பொருட்கள் பற்றிய **விவரம் அவ்வுறையில் குறிக்கப்பட** வேண்டும்.
- ஒரு உறையில் வைக்கப்படும் **பட்டியல் அல்லது பதிவு** வெற்றறிக்கையாக இருப்பினும் ஒரு சீட்டில் மேற்படி பட்டியல் அல்லது பதிவு '**வெற்றறிக்கை' அல்லது** 'Nil' **என எழுதப்பட்டு** அதனை சம்பந்தப்பட்ட உறையினுள் வைத்திடல் வேண்டும்.
- ஐந்து வகையான உறைகளும் முறையே அரக்கு முத்திரையிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- **அனைத்து (ஐந்து) உறைகளும் தனித்தனியாக வழங்கப்படுவதை** சந்தேகத்திற்கும் குழப்பத்திற்கும் இடமளிக்கா வகையில் உறுதி செய்து கொள்ளவும்.

# இரண்டாவது சிப்பம் (சட்டமுறை சாரா உறைகள் Non Statutory covers).

1. குறியீட்டுப்படி அல்லாத வாக்காளர் பட்டியல் (Reference)
2. வாக்குச்சாவடி முகவர்களின் நியமனக் கடிதங்கள்
3. **மறுப்பிற்குட்பட்ட வாக்குகளின் பட்டியல் (**Separate cover**)**
4. பார்வையற்ற வாக்காளர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் உதவியாளர்களின் உறுதிமொழிகள்.
5. மறுப்பிற்குட்பட்ட வாக்குகள் குறித்து பெறப்பட்ட பணத்திற்கு பற்றுச்சீட்டு புத்தகம் மற்றும் அதற்குரிய தொகை.
6. பயன்படுத்தப்படாத அல்லது சேதமுற்ற தாள் முத்திரைகள் மற்றும்
7. பயன்படுத்தப்படாத 'வாக்காளர் துண்டுச்சீட்டுகள்'
8. பயன்படுத்தப்படாத மற்றும் சேதமுற்ற சிறப்பு அட்டைகள்
9. பயன்படுத்தப்படாத மற்றும் சேதமுற்ற ஒட்டுத்தாள் முத்திரைகள்

- மறுப்பிற்குட்பட்ட வாக்குகளின் பட்டியல் அடங்கிய உறைக்கு மட்டும் அரக்கு முத்திரை அவசியமாகும்.
- இந்த இனங்களை ஒரு **பெரிய உறையில் வைத்தால்** போதுமானது.

# மூன்றாவது சிப்பம்

1. வாக்குச்சாவடித் தலைமை அலுவலருக்கான கையேடு
2. வாக்குப்பதிவுக் கருவி தொடர்பான நடைமுறைக் கேயேடு
3. அழியாத மைக்கும்பி (மேல் மூடி முறையாக மூடப்பட்டு மெழுகுவர்த்தி அல்லது அரக்கின் மூலம் மேல்புறத்தில் கசிவு ஏற்படாவண்ணம் வைத்திடல் வேண்டும்).
4. மை ஒற்றும் பெட்டிகள்
5. பிரித்தறி சின்னம் அமைந்த ரப்பர் முத்திரை
6. அம்புக்குறி ரப்பர் முத்திரை
7. அழியாத மைக்குப்பி வைப்பதற்கான கோப்பை
8. வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் உலோக முத்திரை

# நான்காவது சிப்பம்

இதர இனங்கள் இருப்பின் அவையனைத்தும்.

- இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது சிப்பங்களில் அடங்கும் உறைகள் தனித்தனியாக தயார் செய்யப்பட்டாலும் அவைகளுக்கும் அரக்கு முத்திரையிட வேண்டியதில்லை. நூலினால் கட்டப்பட்டு பாதுகாப்பாக வழங்கப்படல் வேண்டும்.
- மேற்படி முத்திரையிடப்படாத உறைகள் மற்றும் **எதிர்க்கப்பட்ட வாக்குகளின் பட்டியல் அடங்கிய முத்திரையிடப்பட்ட உறை** ஆகியவை தொடர்புடைய பெரிய அளவிலான உறைகளில் வைக்கப்படல் வேண்டும்.
- வாக்குச்சாவடித் தலைமை அலுவலரால் கையொப்பமிடப்பட்ட ‘பரிசீலனைத் தாளும்’ (check memo) வழங்கப்படல் வேண்டும்.

# தலைமை அலுவலர் குறிப்பேடு தயாரித்தல்

**தலைமை அலுவலர் தேர்தல் விவரக் குறிப்பேடு தயாரித்தல், வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தேர்தல் ஆவணங்களை தேர்தலின் முடிவில் ஒப்படைத்தல்**

- தேர்தல் நடவடிக்கைகளை முறையாக எண்ணிடப்பட்டு வழங்கப்படும் அச்சிடப்பட்ட தலைமை அலுவலர் தேர்தல் விவரக் குறிப்பேட்டில் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும் (இணைப்பு 11).
- வாக்குப்பதிவின்போது நடைபெறும் அனைத்துத் தொடர்புடைய நிகழ்வுகளையும் அவ்வப்போது இந்த குறிப்பேட்டில் பதிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.
- வாக்குப்பதிவின் முடிவில் அனைத்துப் பதிவுகளையும் பதிந்து நாட்குறிப்பை நிறைவு செய்வது மிகவும் தவறானதும் கண்டிக்கத்தக்கதுமாகும். நாட்குறிப்பினை உரிய கால இடைவெளிகளில் முழுமையாக பதியாமலிருந்தால், மாநில தேர்தல் ஆணையத்தால் நடவடிக்கை எடுக்க ஏதுவாகும்.

# தேர்தல் ஆவணங்கள் மற்றும் சாதனங்கள் ஒப்படைத்தல்

**அலுவலரிடம் 12 தேர்தல் ஆவணங்கள் மற்றும் சாதனங்கள் ஒப்படைக்கப்படும்.**

1. முத்திரையிடப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள்
2. பதிவான வாக்குகளின் கணக்கு, தாள் முத்திரைக் கணக்கு ஆகிய உறை
3. வாக்குச்சாவடித் தலைமை அலுவலரின் உறுதிமொழி அடங்கிய உறை
4. வாக்குச்சாவடித் தலைமை அலுவலரின் குறிப்பேடு அடங்கிய உறை
5. சட்டமுறையான உறைகள் வைக்கப்பட்டுள்ள முதலாவது சிப்பம் (5 உறைகள் அடங்கியது)
6. சட்ட முறை சாரா உறைகள் வைக்கப்பட்டுள்ள (9 இனங்கள்) 2வது சிப்பம்
7. தேர்தல் சாதனங்கள் (8) அடங்கிய 3 வது சிப்பம்
8. இதர பொருட்கள் அடங்கிய நான்காவது சிப்பம்
9. வாக்குப்பதிவு அடைப்புப் பகுதி
10. கை விளக்கு வழங்கப்பட்டிருப்பின்
11. குப்பைக்கூடை
12. வழங்கப்பட்ட பாலித்தீன் அல்லது சாக்குப்பை

# ஒப்படைப்புப் பட்டியல்

- ஒப்படைப்புப் பட்டியல் 3 நகல்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
  - முதலாவது நகல் வாக்குச் சாவடி தலைமை அலுவலர்
  - இரண்டாவது நகல் மண்டல அலுவலர்
  - மூன்றாவது நகல் வாக்குச்சீட்டுகள் எண்ணுமிடத்திலுள்ள தேர்தல் சாதனங்களைப் பெறும் அலுவலர்).

- உங்கள் வாக்குச்சாவடிக்கு பொறுப்பான மண்டல அலுவலரிடம் மேற்படி வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் பிற சாதனங்களை ஒப்படைத்து நீங்கள் அதற்கான ஒப்புதலை குறிப்பிட்ட ஒப்படைப்பு படிவத்தில் பெற வேண்டும்.

# நன்றி